



ஆனால் நிச்சயமாய்
அதனுடைய விலை
இதைவிட
அதிகம்தான்?
. அப்படியில்லை .. கோல்டன் பிளாட்டினம் பேனா முன் இருந்த விலையான ரூ. 3-1-0 க்கே கிடைக்கிறது. சரக்குக்குறைவு ஏற்பட்டிருந்தாலும், விலைவாசிகள் அதிகமாயிருந்த போதிலும் கோல்டன் பிளாட்டினம் பேனாவின் இலக்ஷணம் எப்பொழுதும் போல உயர்ந்ததாகவே இருக்கிறது. ஒவ்வொரு உண்மையான பிளாட்டினம் பேனா குழலின் மேலும் நிப்பின் மேலும் பேனாவின் பெயர் செதுக்கப்பட்டிருக்கிறது— "பிளாட்டினம்" என்ற பெயர் இருக்கிறதா என்று பாருங்கள். போலிகளை வாங்காதீர்கள்
ரூ. 3/1
கோல்டன் பிளாட்டினம்
GOLDEN
Platignum
REGD
இங்கிலாந்தில் செய்யப்பட்டது.
சகல வியாபார உரிமையாளர்கள்:-
முல்லர் அண்டு பிப்ஸ் (இந்தியா) லிமிடெட
15, கங்குராம செட்டித் தெரு, மதராஸ்


வந்தனம்!
நீங்கள்
லைப்பாய் தேகாப்பியாசம்
செய்தீர்களா?
வாழ்க்கையில் உங்கள் ஆரோக்கியத்தை விட முக்கியமானது வேறெதுவுமில்லை. சீர சௌக்கியத்தின் வாயிலாகத்தான் புத்தி கூர்மையும் வெற்றியுமடையலாம்.
தவறாமல் தேகப்பயிற்சி செய்தும், ஆக்கப் பொருள்கள் கொண்ட சாதாரண உணவை உட்கொண்டும், தேகசுத்தத்தை முக்கியமாக கவனித்தும், திட ஆரோக்கியத்தைப் பெறுங்கள்.
ஆரோக்கியமளிக்கும் லைப்பாய் சோப், அதிலடங்கியுள்ள சுகாதாரப் பொருளின் சக்தியால் தேகசுத்தத்தைத் தருவதோடு நோய்களிலிருந்து உடலை பாதுகாக்கவும் உதவுகிறது.
லைப்பாய் தேகப்பயிற்சிப் படங்கள்
லைப்பாய் தேகப்பயிற்சிப் படங்களுக்கு Dept. 8411
P.O. Box 758, Bombay, 1
என்ற விலாசத்திற்கு
இரண்டணு ஸ்டாம்பு
அனுப்புங்கள்.
லைப்பாய் சோப்புடன்
துவக்கும் நாளே நன்னாள்
LIFEBUOY
SOAP
L. 94-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED


பால் பிளேடுகள்
உட்குழிவு கொண்டவை
நீடித்த நாட்களுக்கு
க்ஷவரம் செய்கின்றன
உட்குழிவுகொண்ட
பால் பிளேடு
வளைந்துகொடுக்கும் முனை
சாதாரண ரேஸர்
பிளேடு
கடினமான முனை
பால் பிளேடுகள் வளைந்து கொடுக்கும் தன்மை யுடையதால் அது ஒவ்வொரு ரோமத்தையும் ஒரே தடவையில் மேல் தோல் மட்டத்திற்கு மழுங்க க்ஷவரம் செய்து சருமத்திற்கு பட்டுபோன்ற மிருதுத் தன்மை கொடுக்கிறது. ஆதலால் அதிகம் அழுத்தி க்ஷவரம் செய்ய வேண்டியதில்லை. பால் பிளேடுகள் நீடித்துழைக்கின்றன.
இரண்டு
முனையுடையது
4 க்கு 5 அணா
PAL
அமெரிக்காவில்
கண்டு பிடிக்கப்
பட்டது.
PBC 7A TAMIL
உட்குழைந்து தீட்டப்பட்ட ரேஸர் பிளேடுகள்
எல்லா சாதாரண ரேஸர் மிஷின்களிலும் சரியாக பொருந்துகின்றன.
சோல் விநியோகஸ்தர்கள்: இந்தியன் கமர்ஷியல் கம்பெனி லிட்.
45-47, அப்போலோ தெரு, போர்ட், பம்பாய்.
தென்னிந்தியாவுக்கு சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
மெஸர்ஸ். பாரி & கம்பெனி, லிமிடெட்
தபால் பெட்டி நெ. 12, மதராஸ் & கிளைகள்

தீபாவளி ரிலீஸ்

கஞ்சன்

இத்துடன்

மகாத்மாவின் பழனி விஜயம்

(1946)

&

சுதந்திர தின விழா



நவம்பர் **11** தேதி முதல் காண்பிக்கப்படுகிறது

ஜுபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட்



கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 16 | நவம்பர் 16 | சர்வசித்து ௵ கார்த்திகை 1


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

கனம் சட்ட மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களிடம் நமக்கு என்றைக்கும் பெரு மதிப்பும் மரியாதையும் உண்டு. தமிழ் நாட்டில் அரசியல் நிர்வாகத்தில் நீண்ட அனுபவம் உள்ளவர்களில் டாக்டர் சுப்பராயன் முதன்மையான ஒருவர். பொது வாழ்வுக்கே தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவர். டாக்டர் சுப்பராயன், அவருடைய மனைவியார், மகன், மகள், மருமகன் அனைவரும் தாய்நாட்டின் தொண்டில் சிறை சென்றவர்கள். பரம்பரையான ஜமீன்தார் ஆயினும், ஜனநாயகத்தில் மிக்க பற்று உடையவர். தேச நிர்வாகத்தில் எப்பேர்ப்பட்ட பதவிக்கும் தகுதியானவர் என்பதில் ஐயமில்லை.



இத்தகைய நமது சட்ட மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் விஷயமாகப் பொது மக்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. "குதிரைப் பந்தய"த்தை ஒழிப்பதற்கு அவர் நடவடிக்கை எடுக்க மாட்டார் என்று சிலர் சந்தேகப் பட்டார்கள்; சொல்லவும் சொன்னார்கள். நீண்ட காலமாகக் குதிரைப் பந்தயக் கிளப்பில் டாக்டர் சுப்பராயன் அங்கத்தினராயிருந்து வந்தபடியால், மேற்கண்டவாறு சிலர் சந்தேகிப்பதற்கும் பேசுவதற்கும் இடமேற்பட்டது.

எனவே, சென்ற வாரத்தில் "குதிரைப் பந்தய ஒழிப்பு" மசோதாவை டாக்டர் சுப்பராயனே கொண்டு வரப் போகிறார் என்ற செய்தியைப் பார்த்ததும் நம்முடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இது உண்மைதானா என்று விசாரித்து நிச்சயம் செய்து கொண்டு இன்னும் அதிகமான சந்தோஷத்தை அடைந்தோம். டாக்டர் சுப்பராயன் அவர்களின் சொந்த அபிப்பிராயம் எப்படி இருந்தபோதிலும், பொது மக்களின் அபிப்பிராயத்தை அவர் அவசியம் நிறைவேற்றி வைப்பார் என்று நாம் உறுதியாக நம்பினோம். அந்த நம்பிக்கையை மெய்ப்படுத்திய டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



அபிவிருத்தியில் பங்காளிகள்

நவயுக வாயிற்படிமீது காலூன்றி, நாம் இன்றைய பாரதநாட்டில் மாபெரும் மாறுதல்களை நெருக்கு நேர் கண்ணுறுகிறோம். வலிமையும் ஒன்றிப்பு மோங்கி, மேலான இருக்கை, உணவு . . . உடுக்கை வசதிகளுடன் சிறந்து விளங்குமோர் தேசமாகும் நம் கண்முன் நிகழ்வது. அப்படிப்பட்ட நாளைய நாட்டிலும் பக்கிங்ஹாம் & கர்னாடிக் மில்லுகளின் நீடித்துழைக்கும், கவர்ச்சிவாய்ந்த, உயர்ந்த நெசவுத் தரங்களுக்கு நல்ல கிராக்கி யிருக்கத்தான் செய்யுமென்கிற நம்பிக்கை மேன்மேலும் எங்கள் அபிவிருத்திக்குத் தூண்டுகோலாக அமைகிறது.

இன்று ரசாயனங்களுக்கும், சாயங்களுக்குமுள்ள பஞ்சம் எங்கள் உற்பத்தியை மட்டுப்படுத்தியே வருகிறது - ஆவசிய துணி ரகங்கள் மட்டுமே எங்களால் இப்பொழுதும் தயாரிக்க இயலுகிறது. ஆனால் அந்நெசவுத் தரங்கள், எழுபதாண்டுகளாக எங்கள் தயாரிப்புகளைச் சிறப்பித்துள்ள நேரிய தன்மையிலும், உழைப்பிலும், யாவற்றிற்கு மேலான பெருமதியிலும் கிஞ்சித்தேனும் குறைபாடுகளின்றியே விளங்குகின்

இப்பொழுது, கிடைக்கும் சொற்ப துணிமணிகளை கூடுமான காலம் உழைக்கச் செய்ய வேண்டியிருப்பதால், நீங்கள் இந்தப் பெயர்போன வர்த்தக முத்திரைகளுடைய டிரில்கள், ட்வில்கள், லாங்க்ளாத்து, ஷர்ட்டிங்குகள், ஸூட்டிங்குகள், டஸ்ரோஸ்கள் ஆகியவைகளை வாங்குவது முன்னெப்பொழுதையும் விட ஆவசியமாகிறது!

பக்கிங்ஹாம் & கர்னாடிக் மில்ஸ் (சென்னை)

மானேஜிங் ஏஜண்டுகள்: **பின்னி & கோ. (மெட்ராஸ்) லிட்.**

என்ன சேதி?

"வெள்ளிமணி" தீபாவளி மலர்

பிறக்கும்போதே 'டாண் டாண்' என்று மணி அடித்துக்கொண்டு பிறந்த "வெள்ளி மணி"ப் பத்திரிகை, தீபாவளிப் பண்டிகையின்போது அழகிய விசேஷ மலர் ஒன்றைக் கொண்டுவந்து ஜயபேரிகை கொட்டுகிறது! ஹிஸ் எக்ஸலென்ஸி இராஜகோபாலாச்சாரியார் (இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரல்) தமிழ்ப் பெருமக்களுக்கு அனுப்பியிருக்கும் தீபாவளி வாழ்த்து, "வெள்ளி மணி" தீபாவளி மலரைப் பிரித்ததும் மங்களகரமான மஞ்சள் வர்ணத்தில் காட்சி அளிக்கிறது. ரஸிகமணி டி. கே. சி, நாமக்கல் கவிஞர், கனம் சிவசண்முகம் பிள்ளை, கல்வி மந்திரி அவிநாசிலிங்கம் செட்டியார், பி. ஸ்ரீ. ஆச்சாரியார், ஷெரிப் ராமசாமி நாயுடு, ஸ்ரீ பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை ஆகியவர்களின் கட்டுரைகளும், "பரதன்" எழுதிய ஹாஸ்யம் ததும்பும் குணசித்திரமும், "கல்கி" ஆசிரியர், சங்கரராம், சாவி, குகப்ரியை முதலியவர்களின் கதைகளும் "வெள்ளி மணி" தீபாவளி மலரை அழகு செய்கின்றன. திருப்பிய பக்கமெல்லாம் வர்ண சித்திரமயமாகக் காணப்படுகிறது. ஹாஸ்யச் சித்திரங்களுக்கும் குறைவில்லை. மொத்தத்தில் முதல்தரமான தமிழ்த் தீபாவளி விருந்தாகத் திகழ்கின்றது. "வெள்ளி மணி" தோன்றிய முதல் ஆண்டிலேயே இவ்வளவு சிறந்த மலர் வெளியிட்டிருப்பதைப் பார்க்கும்போது, அடுத்த ஆண்டில் இன்னும் என்னென்ன அதிசயங்களை "வெள்ளி மணி" செய்யுமோ என்று அதிசயிக்க வேண்டியிருக்கிறது. விலாசம்: தமிழ்ப் பண்ணை, தியாகராய நகர், சென்னை; விலை ரூ. 4—0—0.

வ. உ. சி. தினம்

தேசபக்த திலகமாகிய ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தக் கொண்டாட்டம் அடுத்த வாரத்தில் தமிழ் நாடெங்கும் நடைபெறும். அமர கவி பாரதியார் தேசபக்தி ததும்பும் சிரஞ்சீவிக் கவிதைகளைப் பாடுவதற்குக் காரண புருஷரா யிருந்தவர் ஸ்ரீ வ. உ. சி. அவர்கள். தேசத்துக்காகத் தியாகம் செய்யவும், சிறை செல்லவும் வழி காட்டிய தீரர் ஸ்ரீ வ. உ. சி. அவர்கள். அத்தகைய மகா தேச பக்தரின் தினத்தைத் தமிழ் மக்கள் உற்சாகமாகக் கொண்டாடுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஸ்ரீ வ. உ. சி. அவர்களுக்கு ஞாபகார்த்தம் ஒன்று அமைப்பது தமிழ் நாட்டாரின் மிக முக்கியமான கடமை. இதற்காகத் தூத்துக்குடி அன்பர்கள் ஏற்கனவே முயற்சி தொடங்கி ஓரளவு நிதியும் திரட்டி யிருக்கிறார்கள். இந்த முயற்சியில் தமிழ் நாட்டில் உள்ள தேசபக்தப் பிரமுகர்கள் எல்லாரும் கலந்து கொண்டு ஒத்துழைத்தல் இன்றியமையாததாகும். ஸ்ரீ வ. உ. சி. அவர்களுக்கு எந்த முறையில் ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டும் என்பது பற்றியும், முதலிலேயே அது விஷயத்தில் சிரத்தை உள்ளவர்கள் எல்லாரையும் கலந்து கொண்டு தீர்மானித்தல் நலமா யிருக்கும்.

நல்ல போட்டி!


சென்னை சர்க்காருக்கு ஒரு போட்டி ஏற்பட்டிருக்கிறது. அதுவும், எதிர்பாராத ஓரிடத்திலிருந்து ஏற்பட்டிருக்கிறது. 'என்ன அது? சென்னை சர்க்காருக்குப் போட்டியா?' என்று யாரும் திகைக்க வேண்டாம். அதற்கு மாறாக, அந்தப்

போட்டி எல்லாரும் சந்தோஷப்பட வேண்டிய காரியமாகும். ஆமாம், நல்ல காரியத்தில் போட்டி ஏற்படுவது ஆனந்தத்தைக் கொடுக்கும் விஷய மல்லவா?

பிரஞ்சு சர்க்கார் இந்தியாவில் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழுள்ள காரைக்கால். மாஹி இவ்விரு நகரங்களிலும் அடுத்த வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வரத் தீர்மானித்திருக்கிறார்களாம். பிரான்ஸ் தேசம் குடி வகைகளில் பெயர் போனது. அப்படியிருந்தும் பிரஞ்சு சர்க்கார் தங்கள் ஆட்சியில் இருக்கும் இந்தியப் பிரதேசங்களில் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. மற்ற மாகாணங்களிலுள்ள காங்கிரஸ் சர்க்கார்கள் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வருவதே பாராட்டத்தக்க ஒரு காரியமாக இருக்கும்போது, ஓர் அன்னிய சர்க்கார் அவ் விஷயத்தில் சிரத்தை காட்டுவது ரொம்ப ரொம்பப் புகழத் தக்கதுதான். இருந்தாலும் ஏதோ இரண்டு நகரங்களில் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வருவதற்குத் தேதி குறிப்பிட்டிருக்கும் பிரஞ்சு சர்க்கார், இந்தியாவில் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழுள்ள பிரதேசங்களிலிருந்து வெளியேறுவதற்கும் தேதி குறிப்பிடுவார்களாயின், பிரான்ஸ் தேசம் சரித்திரத்திலேயே புகழிடம் பெறும்படியான ஒரு நல்ல காரியத்தைச் செய்தவர்களாவார்கள். நாற்பது கோடி ஜனங்களும் பதினாறு லட்சம் சதுர மைல்களும் உள்ள இந்தியாவையே பிரிட்டிஷார் விட்டுவிட்டுச் சென்றிருக்கையில், மூன்று லட்சம் ஜனங்களும் சுமார் இருநூறு சதுர மைல்களும் உள்ள பிரதேசத்தை விட்டுச் செல்லுவது பிரஞ்சு சர்க்காருக்கு ஒரு பெரிய காரியமல்ல. இந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான ஜனங்கள் சுதந்திரம் பெற்றிருக்கையில், பிரஞ்சு சர்க்கார் ஆதிக்கத்தின் கீழுள்ள மூன்று லட்சம் இந்தியர்கள் மாத்திரம் அன்னிய ஆட்சியின் கீழ் அடிமைகளாக இருக்க விரும்புவார்களா? அந்நிலைமை பிரஞ்சு சர்க்காரின் பெருமைக்குத்தான் ஏற்றதா? இவ்விஷயமாக மகாத்மா காந்தி கூறியுள்ள புத்திமதிக்குப் பிரஞ்சு சர்க்கார் செவி சாய்த்துத் தங்களுக்குப் புகழைத் தேடிக் கொள்வார்களென நம்புகிறோம். மதுவிலக்கு விஷயமாக காங்கிரஸ் சர்க்காருடன் போட்டி போடும் பிரஞ்சு சர்க்கார், இந்தியர்களுக்குச் சுதந்திரம் அளிப்பதிலும் பிரிட்டிஷ் சர்க்காருடன் போட்டி போட்டுக் கொண்டு பிரான்சுக்குப் போய்ச் சேருவார்களாக!

நிகழ்ச்சிச் சித்திரம்

ஹைதராபாத் நவாப் ஆண்டியான அலங்கோலம்!





ஹைதராபாத் நவாப் கஜானாவில் ஒரு ரூபாய் கூட இல்லை. எனவே, ஹைதராபாத் சமஸ்தான நிர்வாகச் செலவுக்குத் தொகை அனுப்புவது இந்திய சர்க்காரின் முதல் வேலையாகியிருக்கிறது. —பத்திரிகைச் செய்தி

ஷுஹ்ரவர்த்தி— அன்றும் இன்றும்



- சாஸ்திரி


வரப்போகும் வாழ்க்கை!
சென்னையில் நிகழ்ந்த மாணவிகளின் மகாசபைக் கூட்டத்தில், பெண்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி ஒரு தீர்மானம் நிறை வேறியது— பத்திரிகைச் செய்தி
நீங்களெல்லோரும்
எதிர்கால சிப்பாய்கள்


காஷ்மீரத்தின் மீது படையெடுத்துள்ள கொள்ளைக்காரர்களுக்கு தீபாவளி பண்டிகையன்று பொங்கப் பொங்க எண்ணெய் ஸ்நானம் கிடைத்தது!
காஷ்மீர்

ஆரம்ப வெற்றி

நம் பாரத நாடு பெறுதற்கரிய சுதந்திரம் பெற்று இன்னும் சில மாதங்கள்கூடச் செல்லவில்லை.

அதற்குள் நமது இந்திய சர்க்கார் சர்வதேச அரங்கத்திலும், அரசியல் அரங்கத்திலும், போர் அரங்கத்திலும் பூர்வாங்க வெற்றிகள் பெற்று விட்டனர்!

தென்னுப்பிரிக்கா இந்தியர் பிரச்னை, டச்சு—இந்தோனேஷ்யப் போர், தென் மேற்கு ஆப்பிரிக்கா நிர்வாக விஷயம், இவைகளை யொட்டி சர்வதேச அரங்கத்தில் இந்தியா பெற்ற வெற்றிகளை நேயர்கள் அறிவர்.

வல்லரசுகள் போட்ட முட்டுக் கட்டைகளையும் தகர்த்து இந்தியா மேற்படி வெற்றிகள் பெற்றதுதான் விசேஷமாகும்.

அடுத்தபடியாக, அரசியல் அரங்கத்தில் இந்தியா பெற்ற வெற்றி, பல்வேறு சமஸ்தானங்களையும் ஆபத்தான காட்டுப் பாதையிலிருந்து திருப்பி நல் வழிக்குக் கொண்டு வந்ததுதான்.

வாதம், பிடிவாதம், முடக்குவாதம், வகுப்புவாதம் முதலிய பல்வேறு நோய்களாலும் பீடிக்கப்பட்டிருந்த சமஸ்தானங்களை வழிக்குக் கொண்டு வருவதென்பது ஓர் அசாதாரணமான சாகஸமல்லவா?

அதிலும், இறுதி வரையில் எந்தச் சமஸ்தானத்தின் விஷயத்திலும் அதிருப்திகரமான முறைகள் எதையும் கைக் கொள்ளாமலும், தங்களுடைய 'உரிமைக'ளில் தலையிட்டு விட்டார்களென்று இந்திய சர்க்கார் மீது சமஸ்தானங்கள் பழி சுமத்துவதற்கு இடம் கொடுக்காமலும், இந்திய சர்க்காரும், குறிப்பாக சர்தார் பட்டேலும் வெகு நளினமாகப் பெற்றுள்ள வெற்றியை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்.

மண்டைக் கர்வம் பிடித்திருந்த சுண்டைக்காய்ப் பிரமாண முள்ள ஜூனகாத் சமஸ்தானம் கூட வழிக்கு வந்து கொண்டிருக்கிறது.

"எங்கள் பாடு திண்டாட்டமாகி விட்டது. தயவு செய்து எங்கள் சமஸ்தான நிர்வாகத்தை நீங்கள் ஏற்று நடத்துங்கள்" என்று ஜூனகாத் திவான் இந்திய சர்க்காரைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஜனங்களின் அபிலாஷைகளுக்கு விரோதமாக நடந்துகொண்ட மேற்படி சமஸ்தான நவாப், தமது ராஜ்யத்தையே துறந்து விட்டுப் போகும்படி நேர்ந்திருக்கிறது.

இந்தியாவில் இன்னும்கூட இருந்து வரும் ஒன்றிரண்டு எதேச்சாதிகார வாதிகளுக்கு ஜூனகாத் நவாபின் துறவு ஒரு படிப்பினையாக இருக்கு மென்பதில் சந்தேகமில்லை.

• • •

காஷ்மீர சமஸ்தானத்தின் எதிர் காலமும் தகராறு எதுவுமின்றி முடிந்திருக்கக் கூடும். ஆனால், அவ் விஷயம் நிர்ணயமாவதற்குள், எல்லைப்புறத்திலுள்ள கொள்ளைக்காரர்கள் நவீன யுத்த தளவாடங்களுடன் காஷ்மீரத்தின் மீது படையெடுத்து, காஷ்மீர சமஸ்தானக் கிராமங்களைச் சூறையாட ஆரம்பித்து விட்டார்கள்.

அதுமாத்திரமல்ல; அவர்கள் காஷ்மீரத்தின் தலை நகரையும் அணுகி விட்டார்கள்.

எனவே, அந்த ஆபத்தான நிலைமையில் காஷ்மீர சர்க்காருக்கு இந்திய சர்க்காரின் இராணுவ உதவியை நாடும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

அதே சமயம், காஷ்மீர மகாராஜா பொறுப்பாட்சி முறைகளையும் கைக் கொள்ள முன்வந்தது மிகவும் நேர்மையான காரியமாகும்.

காஷ்மீர சமஸ்தானம் சம்பந்தப்பட்ட வரையில் இந்திய சர்க்காருக்கு இருவித வெற்றிகள் கிடைத்திருக்கின்றன வென்றே கூறவேண்டும்.

அதாவது, காஷ்மீரத்தைச் சூறையாட வந்த பயங்கரக் கொள்ளைக் கூட்

டத்தை இந்திய சர்க்கார் விரட்டியடித்துப் போரில் வெற்றி பெற்று வருவதுடன், அந்தச் சமஸ்தானத்தில் ஷேக் அப்துல்லா தலைமையில் பொறுப்பாட்சி ஏற்படும்படியும் செய்தது மிகவும் பாராட்டத் தக்கதாகும்.

எந்தச் சமஸ்தானமாயினும், அதன் ஜனங்களுக்கு விரோதமாக எதுவும் செய்ய இந்திய சர்க்கார் விரும்பவில்லையென்பதையே அவர்களின் மேற்படி செய்கை காட்டுகிறது.

சூழ்ச்சி, துரோகம் முதலிய ஆயுதங்களைக் கொண்டோ அல்லது இராணுவ பலத்தைக் கொண்டோ இந்திய சர்க்கார் எந்தச் சமஸ்தானத்தையும் துன்பத்திற்குள்ளாக்கப் போவதில்லை.

அந்தந்தச் சமஸ்தானத்தின் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டியவர்கள் ஆங்காங்குள்ள ஜனங்கள்தான்.

மேற்படி நியதியை இந்திய சர்க்கார் வாயளவில் உபதேசம் செய்வதுடன் நிற்கவில்லை; கிரியாம்சையிலும் காட்டி வருகிறார்கள்.

அதுபோலவே, பாகிஸ்தான் சர்க்காரும், பாகிஸ்தான் ஜனங்களும், இந்தியாவிலுள்ள முஸ்லிம்களும் தங்களுடைய அந்தரங்க சுத்தியைச் செய்கையில் காட்ட வேண்டும்.

• • •

“ஒரு டன் வார்த்தைகளைக் காட்டிலும் ஒரு அவுன்ஸ் செய்கையே மேலானது.”

இது ஓர் ஆங்கிலப் பழமொழியாகும்.

இன்று இந்தியாவிலுள்ள முஸ்லிம் லீக்கர்களின் நிலைமையை விளக்குவதற்கு, மேற்படி பழமொழி முற்றிலும் பொருத்தமாக இருக்கிறது.

பெரும்பாலோரும், முஸ்லிம் லீக்கில் இருந்து கொண்டே இந்திய சர்க்காரிடம் விசுவாஸம் காட்ட வேண்டுமென்று டன் கணக்கில் வார்த்தைகளைக் கூறி வருகின்றனர்.

இந்தியாவிலுள்ள சிறுபான்மையோரான தங்கள் மீது இந்திய சர்க்கார் நம்பிக்கை வைக்க வேண்டுமென்றும் முஸ்லிம்கள் இடைவிடாது வேண்டிக் கொண்டு வருகின்றார்கள்.

ஆனால், பிரமாத ஆர்ப்பாட்டமான வாசா கைங்கர்யத்தில் ஈடுபட்டுள்ள அவர்களிடம், அதற்குப் பொருத்தமாக ஓர் அவுன்ஸ் நடவடிக்கைகூட காண்பது அரிதாக இருக்கிறது!

இந்திய சர்க்காருக்காகத் தமது உயிரையும் அர்ப்பணம் செய்யத் தயாராயிருப்பதாகக் கர்ஜித்த ஒரு முஸ்லிம் லீக் பிரமுகர், அவ்வாறு கர்ஜித்த ஒரு சில நாட்களுக்குள், குடும்பத்துடன் பாகிஸ்தானுக்குச் சென்று விட்டார்!

நல்ல பிள்ளைக்கு அடையாளம் சொல்லிக் கொள்ளாமல் செல்லுவதுதான் என்பதற்கிணங்க, அவர் தமது சகாக்களுக்குக் கூடத் தெரியாமல் ஓடிவிட்டதுதான் ஆச்சரியமாகும்.

மற்றும் ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமையே தங்களுடைய வாழ்க்கையின் லட்சியமென்று பறைசாற்றிக் கொண்டு, ஹிந்து—முஸ்லிம் சமாதானக் கமிட்டியிலும் அங்கம் வகித்த சிலருடைய வீடுகளைச் சோதனை செய்த போது, வண்டி வண்டியாக ஆயுத வகைகள் அகப்பட்டிருக்கின்றன.

இந்திய சர்க்காரிடம் தம்முடைய கலப்பற்ற விசுவாஸத்தைத் தெரிவிப்பதற்காகத் தமது ஹிருதயத்தையும் பிளந்து காட்டத் தயார் என்று குரான் மீது பிரமாணம் செய்த முஸ்லிம் ‘பிரமுகர்’ வீட்டிலிருந்து ஆயிரக்கணக்கில் போர்த் தளவாடங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

பாகிஸ்தானுக்குச் செல்லத் தயாராக இருந்த ஒரு முஸ்லிம் அதிகாரி வீட்டை இரகசியப் போலீசார் சோதனை செய்தபோது, அங்கிருந்தும் ஏராளமான படுகொலைக் கருவிகள் அகப்பட்டன.

இவ்வாறாக, போலீசார் செய்த சோதனையின் பலனாக ஆயிரக் கணக்கில் ஆயுத வகைகள் அகப்பட்டிருக்கும்போது, முஸ்லிம்களின் வீடுகளைப் போலீசார் சோதனை செய்வது நியாயமற்ற காரியமென்று கல்கத்தாவில் கூடிய முஸ்லிம் லீக் தலைவர்களின் மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேறியிருப்பது, முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் வித்தையாகவே இருக்கிறது.

போலீசாரின் சோதனையை இந்திய சர்க்கார் உடனே நிறுத்த வேண்டுமென்று வற்புறுத்தியுள்ள லீக் தலைவர்கள், சோதனையின் பலனாக ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டதைக் குறித்து ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை!

போலீசார் அவ்வாறு சோதனை செய்யாமலிருந்தால், இதுவரை என்ன நேர்ந்திருக்குமென்பது பற்றியும் அம்மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் சிந்தித்திருப்பதாய்த் தெரியவில்லை.

திருட்டுத்தனமாகவும் துரோக நோக்கத்துடனும் படுகொலைத் தளவாடங்களைப் பதுக்கி வரும் பாதகர்களைக் கண்டித்து ஒரு வார்த்தைகூடக் கூறாத அம் மகாநாட்டினர், சிறுபான்மையோரின் நம்பிக்கையைப் பெறும் விஷயமாக இந்திய சர்க்காருக்குப் புத்தி புகட்டப் புறப்பட்டிருப்பது சுவைக் குதவாத ஒரு காரியமல்லவா?

ஜனுப் ஜின்னு முதலிய பாகிஸ்தான் தலைவர்களின் ஒரு தலைப்பட்சமான அறிக்கைகளுக்கும், மேற்படி மகாநாட்டின் ஒரு தலைப்பட்சமான தீர்மானங்களுக்கும் வித்தியாசம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

அம் மகாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்குச் சிறிதும் மனமாற்றம் ஏற்படவில்லையென்பதையே, அங்கு நிறைவேறிய தீர்மானங்கள் நிரூபிக்கின்றன. மற்றும், ஏற்கெனவே பாகிஸ்தான் சர்க்காரின் விபரீதப் போக்கைக் குறித்து மனம் தெளிந்துள்ள சில பிரமுகர்களையும் அந்தத் தீர்மானங்கள் குழப்பத்தில் ஆழ்த்தி விடலாம்.

அவ்வாறு அவர்களுடைய மனோநிலையைக் குழப்பிவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் மேற்படி மகாநாடு நடத்தப்பட் டிருந்தாலும் அதைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

ஏனெனில், தேசிய முஸ்லிம்களின் திலகமான மௌலானு அபுல்கலாம் ஆஸாத் கூட்டியுள்ள மகா நாட்டுக்குப் போட்டியாக, ஜனுப் ஷுஹர்வர்த்தியால் அவசர அவசரமாகக் கூட்டப்பட்ட ஒரு மகாநாட்டின் மூலம் உருவான பலனை எதிர் பார்ப்பது சாத்தியமாகுமா?

• • •

ஜனுப் ஷுஹர்வர்த்தியின் போட்டி மகாநாட்டைப் பற்றிக் குறிப்பிடும் போது, அதே சமயம் கல்கத்தாவில் நடந்துள்ள பிரபல தேசிய முஸ்லிம்களின் மகாநாடு பற்றியும் சில வார்த்தைகள் கூற வேண்டியது அவசியமாகும்.

பாகிஸ்தான் சர்க்காரிடம் தமது விசுவாஸத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ள ஷுஹர்வர்த்தி, இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுக்கு நேர் வழியைக் காட்டத் தகுதி யற்றவர் என அந்த மகாநாடு தீர்மானித்திருக்கிறது.

டாக்டர் அகமது, வங்காளத்தின் மாஜி சபாநாயகர் சையது நௌஷர் அலி, கல்கத்தா மாஜி மேயர் சையது பத்ருத்ஜா போன்ற பிரபல தேசிய முஸ்லிம்கள் அதில் கலந்து கொண்டிருப்பதிலிருந்து அதன் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

'ஹிந்துக்கள் வேறு, முஸ்லிம்கள் வேறு. ஒரே நாட்டில் இரு சாராரும் வாழ்வதென்பது முடியாத காரியம்' என்ற துவேஷப் பிரசாரம்தான் இன்றைய சகிக்க முடியாத அக்கிரமங்களுக் கெல்லாம் காரணமென்பதை அவர்கள் சுட்டிக் காட்டி யிருக்கிறார்கள்.

எனவே, பாழாய்ப் போன வகுப்பு வாதத்தை ஒழித்துவிட வேண்டும். அந்த வகுப்பு வாதத்துக்குத் தாயகமான லீக்குக்கும் இந்திய முஸ்லிம்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கக் கூடாதென்றும் அம் மகாநாடு இந்திய முஸ்லிம் மகாஜனங்களை மன்றாடிக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

முஸ்லிம் லீகிலிருந்து, பாகிஸ்தானுல் முஸ்லிம்களுக்கு மகத்தான கஷ்ட நஷ்டங்கள் நேருமென்பதை ஆதி முதல் மிகவும் உறுதியுடன் கூறி வந்த தீர்க்க தரிசியுமான மௌலானு அபுல்கலாம் ஆஸாத் டில்லியில் கூட்டியுள்ள மகாநாடே, இந்திய முஸ்லிம்களின் க்ஷேமத்துக்கு வழி காட்டக் கூடியதென்றும் அம்மகாநாடு வலியுறுத்தி யிருக்கிறது.

எனவே, இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள், பாகிஸ்தானிலுள்ள ஒரு தலைவரைப் பின்பற்றுவதால், தங்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படாதென்பதை இனியாவது உணர்ந்து கொள்ள வேண்டும்.

வகுப்பு வெறியையே அடிப்படையாகக் கொண்ட முஸ்லிம் லீக்கைக் கலைத்து விட வேண்டும்.

இனி, இந்தியாவில் முஸ்லிம்கள் மௌலானு ஆஸாதையே தங்களுடைய தலைவராகக் கொண்டு நலம் பெற முயற்சிக்க வேண்டும்.

அவ்விதம் செய்வார்களாயின், இந்தியாவில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் மீண்டும் சகோதரர்கள் போல வாழ வகை யுண்டாகும்.

இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் எதிர்கால க்ஷேமமானது, அவர்கள் முஸ்லிம் உலக திலகமான மௌலானு ஆஸாதின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதையே பொறுத்திருக்கிறது.

வட்ட மேஜை

தஞ்சாவூர்
10—11—47

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு.

தங்கள் கல்கி 4-11-47 இதழில் தமிழ் நாட்டு அரசியல் மேதாவியும், ஊழியர் வர்க்கத்தின் உழைப்பாளியும், சுதந்திர இந்தியாவில் இன்று கவர்னர்களின் அதிபதியாக வீற்றிருப்பவருமான தமிழ் நாட்டுத் தலைவர் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களின் பிறந்த தினம் வெளி வந்திருப்பதைப் பார்த்து அளவிலாப் பூரிப்படைந்தேன்.

வீரம், தியாகம், வருங்கால தீர்க்கதரிசனம், பொருளாதார நிபுணத்துவம் இவைகளெல்லாம் கூடிப் பெரும்புகழ் படைத்த தலைவர் ராஜாஜி அவர்களுக்கு, ஊழியர்களாகிய நாம் மகிழ்ச்சியுடன் அன்னாரது பிறந்த தினத்தைக் கொண்டாடுவதை விடச் சிறந்த மரியாதை வேறென்ன செலுத்த முடியும்?

எல்லாச் சபைகளும், சங்கங்களும், தமிழ் மக்கள் அனைவரும் இந்த 70-வது பிறந்த தின முதலாவது கொண்டாட்டத்தைக் கொண்டாடி தமிழ் நாட்டைப் பெருமைப் படுத்த வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள,
எஸ். வி. கிருஷ்ணஸ்வாமி பாகவதர்,
தலைவன், மாகாண சௌராஷ்டிர
தேசிய வாலிபர் சங்கம்.

ஜுனி விலா
6—11—47

அன்புமிக்க ஆசிரியர் அவர்களுக்கு.

தாங்கள் அனுப்பிய "பாரதி நினைவு மலர்" வந்து சேர்ந்தது. அதைப் பார்க்கவும் படிக்கவும் பரவசமாகிறது. சந்திரா, மணியம், ராகவன், சரவணன் இவர்களின் ஓவியத் திறமை ஒருங்கே இதில் பிரகாசிப்பதை இன்றுவரை நான் எந்த மலரிலும் கண்டதே இல்லை. முகப்புப் படம் ஒன்றே போதும் இதற்கு அத்தாட்சி. அப் படத்தில் கையில் தட்டும், புஷ்பமும், அலங்கார விளக்குமே நம்மை வசீகரிக்கின்றன. மற்றும் வர்ண வேலைப்பாட்டைப் பற்றியும் சொல்லவே தேவையில்லை. இது தமிழர்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் பிரகாசிக்க வேண்டியதே.

தங்கள் அன்புள்ள,
பி. என். ஆராவமுது.

மண்டபம் கேம்ப், மண்டபம்
31—10—47

அன்பார்ந்த ஐயா,

இலங்கை செல்லும் மூன்றாம் வகுப்பு ஏழைப் பிரயாணிகள் ஏழு நாள் மண்டபம் கேம்பில் தங்கிச் செல்ல வேண்டியதாயிருக்கிறது. இவ்விடத்தில் ஆடு மாடு மிருகங்களைவிட மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்குக் கொடுக்கும் மோசமான உணவை, நம் சென்னைப் பொதுஜன சர்க்காரின் சுகாதார மந்திரி ஒரு நாள் வந்து கவனித்தால் அறிய முடியும். காலரா நிமித்தமாகக் கட்டாயம் ஏழு நாள் தங்கித்தான் செல்ல வேண்டுமென நிபந்தனை. ஆனால் இவ்விடத்தில் கொடுக்கும் சாப்பாட்டைக் கவனித்தால், ஏழு நிமிஷம் இருக்க முடியுமா என்பது சந்தேகம். காரணம் அவ்வளவு அசுத்தமான முறையில் சாப்பாடு கொடுத்து வருகிறார்கள்.

1-வது, 2-வது வகுப்புப் பிரயாணிகள் மட்டும் அன்று தங்கி மறு நாள் போக முடியும். ஆனால் ஏழைப் பாமரராகிய நாங்கள் என்ன செய்வது? ஏதாகிலும் மீறி இவ்விடத்தில் நியாயம் பேசுவோமானால் கேம்புக்குள்ளிருந்து வெளியே போக வேண்டியதுதான்! இலங்கை செல்ல முடியுமா என்பது சந்தேகம். சென்னை சர்க்காருக்கு இவ்விஷயத்தை அறிவிக்க விரும்புகிறோம். சென்னை சர்க்கார் ஏழைப் பொதுஜனங்களாகிய எங்களுக்கு ஆதரவளித்து உதவி புரியுமென்று நம்புகிறோம். இது விஷயமாக சென்னை சர்க்காருக்கு 255 பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று தெளிவான முறையில் குறைகளை எடுத்துக் கூறி 30-10-47ல் அனுப்பியிருக்கிறோம்.

முக்கிய குறிப்பு:—23-10-47 வியாழக்கிழமை காலை 10-10 மணியளவில் கொடுக்கப்பட்ட உணவில் உடைந்த போத்தல் துண்டு ஒன்று இருந்தது.

இங்ஙனம்,
பொது ஜனங்கள்.

ஆசை செய்த மோசம்

அருணை



அந்தச் சுண்டெலி மேலச் சுவரிலிருந்து கீழச் சுவருக்குப் போக வேண்டும். அந்தக் கீழச் சுவரைத் தாண்டிவிட்டால், அங்கே ஒரு பானை நிறைய இருக்கும் அரிசியை அது வேண்டிய மட்டும் சாப்பிடலாம்.

ஆகவே வளையிலிருந்து எட்டிப் பார்த்த சுண்டெலி, இரண்டு சுவருக்கு மிடையில் ஒரு கயிற்றுக் கொடி கட்டியிருப்பதைப் பார்த்தது. அதன் மீது ஓடிச் சென்றால் கீழச் சுவரை அடைந்து விடலாம்.

ஆனால், கீழே ஒரு பூனை உட்கார்ந்து மேலே பார்த்துக் கொண்டேயிருந்தது. சுண்டெலி வெளியே வர வேண்டியதுதான்; அது ஒரே தாவாகத் தாவி அந்தச் சுண்டெலியைப் பிடித்துத் தின்றுவிடும்.

அந்தப் பூனைக்காகத் தன்னுடைய பசியைச் சுண்டெலி அடக்கிக் கொண்டுவிட முடியுமா, என்ன? எப்படியாவது கீழச் சுவரைத் தாண்டிச் சென்று, அங்கிருக்கும் அரிசியைத் தின்று, அது தன் பசியை ஆற்றிக் கொள்ள வேண்டியதுதான் என்று தீர்மானித்தது. ஆனால், அதுவரை அந்தப் பூனையால் தன் உயிருக்கு ஆபத்து வராமல் இருக்க வேண்டுமே!

"சரி, உயிரையும் இழக்கக்கூடாது; பசியையும் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு என்ன வழி?" என்று அந்தச் சுண்டெலி யோசித்தது யோசித்தது, அப்படி யோசித்தது. கடைசியில், ஒன்றும் புரியாமல் அது வளைக்குள் இருந்தபடியே வெகு நேரம் கீழே எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

இப்படியே எவ்வளவு நேரம் சும்மா இருப்பது? பொறுமை யிழந்த சுண்டெலி ஒரு தந்திரம் செய்தது. வளையி லிருந்தவாறே அது கீழே பார்த்து, "பெரியப்பா, பெரியப்பா! என் அருமைப் பெரியப்பா! எனக்கு ஒரு உதவி செய்ய மாட்டீர்களா?" என்று கெஞ்சியது.

"என்னடா உதவி, சுண்டெலிப் பயலே!" என்று ஆச்சரியத்தோடும் கோபத்தோடும் கேட்டது பூனை.

"கோபித்துக் கொள்ளாதீர்கள், பெரியப்பா! தயவு செய்து இந்தக் கயிறு பலமானதுதானா என்று கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்களேன்!" என்றது சுண்டெலி.

"பலமானதுதான்; சும்மா வா! சீக்கிரம்!" என்றது பூனை.

"நான் வந்து விடுவேன். எனக்குப் பயமில்லை. என் உருவமும் கனமும் கூடச் சிறியதுதான். ஆனால் எனக்குப் பின்னால் என் தாயார், தகப்பனார், மாமனார், மாமியார் எல்லாரும் வருகிறார்கள். அவர்கள் எல்லோரும் என்னைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு கனமும் பருமனும் உடை

யவர்கள். அதனால் என்னை முதலில் அனுப்பி, கயிறு பலமானதுதானா என்று பார்க்கச் சொன்னார்கள். நான் க்ஷேமமாக எதிரே யிருக்கும் சுவருக்குப் போய்ச் சேர்ந்தவுடன், 'கிரீச், கிரீச்' என்று கத்துவேன். அந்தச் சத்தம் கேட்டதும் என் தாயாரும் தகப்பனாரும், மாமியும் மாமனாரும் வருவார்கள்!" என்றது சுண்டெலி.

பூனைக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "இன்றைக்குக் கொழுத்த விருந்து கிடைக்கப் போகிறது!" என்று அது மனம் பூரித்தது. ஆகவே, "அவசரப்பட்டு இந்தச் சுண்டெலியை இப்போது ஒன்றும் பண்ண வேண்டாம்; பேசாமல் போகட்டும். அதற்குப் பின்னால் பெரிய எலிகள் வந்தவுடன் பிடித்துக் கொன்னுவோம்" என்று அது தீர்மானித்துக் கொண்டது.

பிறகு, "மகனே, மகனே! என் அருமை மகனே! நீ பயப்படாமல் போ! கயிறு பலமாகவே யிருக்கிறது!" என்றது பூனை.

சுண்டெலி தைரியமடைந்து வளையை விட்டு வெளியே வந்தது. அது கீழச்சுவரை நோக்கிக் கயிற்றின் மீது ஊர்ந்து சென்றது. பூனை அந்தச் சின்னஞ் சிறிய எலியை லட்சியம் செய்யாமல், வளைக்குள் ளிருந்து வரப்போகும் பெரிய பெரிய எலிகளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்துக் கெல்லாம் சுண்டெலி எதிர்ச் சுவரை அடைந்து, அதன் உத்திரக் கட்டையிலுள்ள துவாரத்துக்குள் புகுந்தது. உள்ளே போகும்போது அது ஏற்கெனவே பூனையிடம் தெரிவித்திருந்தபடி 'கிரீச், கிரீச்' என்று கத்திக் கொண்டே சென்றது.

பாவம்! எதிர்ச் சுவரையே வைத்த கண் வாங்காமல் அண்ணாந்து பார்த்துக் கொண்டு ஏமாந்து நின்றது பூனை! ஏனென்றால், சுண்டெலியைத் தொடர்ந்து வேறு எலி ஒன்றும் வரவேயில்லை!

அந்த வீட்டிலேயே அது ஒன்று தான் ஏக சக்ராதிபதி ஸ்தானத்தை வகித்து வந்ததென்பதை அந்தப் பைத்தியக்காரப் பூனை எப்படி அறியும்?

வித்தை மாறுகிறது!



வாழ்க, ரேஷன் திட்டம்!

லக்ஷ்மீதரன்

"ரிடயர்ட் முன்சிப் முத்துசாமி ஐயர் குமாரன் வி. ரகுராமன் பி. எஸ். ஸிக்கும், கும்பகோணத்தைச் சேர்ந்த அட்வொகேட் ராமநாதய்யர் குமாரத்தி செள. மீனுக்ஷிக்கும் சென்ற வாரம் சுவாமிமலையில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது" என்ற செய்தி பத்திரிகைகளில் வெளியான இரண்டு மாதத்திற்கெல்லாம், ரகுராமன் சென்னையில் தன் குடும்பத்தை வைத்து நடத்த ஆரம்பித்து விட்டான்.

நாலு வருஷங்களாக ஹோட்டலில் சாப்பிட்டு வந்த ரகுவுக்கு "எப்போடா வீட்டில் வத்தல் குழம்பும், சுட்ட அப்பளாமும் சாப்பிடப் போகிறோம்" என்றாகி விட்டது. தன் ஆபீஸ் மானேஜரின் அருளாலும் கருணையினாலும் அவர் வீட்டிலேயே ஒரு 'போர்ஷ'னைச் சம்பாதித்துத் தயாராக வைத்திருந்ததால், வீடு தேடும் சிரமமில்லாமல் அவனால் 'தனிக் குடித்தனம்' ஆரம்பித்து நடத்த முடிந்தது.

ஆறு மாதங்கள் இன்பமாகக் கழிந்த இளந் தம்பதிகளின் இல்வாழ்க்கையில், மெதுவாகச் சிறு சிறு சச்சரவுகள் தோன்றவாரம்பித்தன. இரவில் அவர்களுக்குள் நடக்கும் சம்பாஷணையின் 'ஸாம்பிள்' கீழ்க்கண்டவாறு:—

"என்னா! எட்டு அவுன்ஸ் அரிசியும் வெள்ளிக்கிழமை ராத்திரியோடே ஆயிடறதே, ஏதானும் ஒரு வழி பண்ணப்படாதோ?"

"என்ன, மீனு! ஒண்ணும் தெரியாதவளாட்டம் பேசறே? கவர்ன்மெண்டிலே கொடுக்கிற ரேஷனுக்குள்ளேதானே 'அட்ஜஸ்ட்' பண்ணியாகணும்? பைத்தியம் மாதிரி பேத்தறியே!"

"ஆமா, நாம்தான் பைத்தியம்! மானேஜராத்திலே பாருங்கோ, எங்கிருந்தோ வாரத்துக்கு மூணு படி, நாலு படின்னு வாங்கறா! படி 1½ ரூபாயாம். தாஸில்தார் ஆத்துலேகூட போனவாரம்..."

"இதோ பார், பிளாக் மார்க்கெட்டிலே வாங்கிச் சாப்பிட என்னிடம் பணம் ஒண்ணும் கொட்டி வெச்சில்லே! பணம் இருந்தாலும் அதெல்லாம் நான் செய்யமாட்டேன். சனிக்கிழமை ஒரு நாள்தானே? கோதுமை, சோளத்தை வெச்சிண்டுதான் ஒப்பேத்தியாகணும்!"

"ஆமா, ரெண்டு வாரமா நீங்க கோதுமை, உளுத்தம் பருப்பு ஒண்ணும் வாங்கிண்டு



வாலே! அடுத்தாப்போலே மூணாவதாத் தச் சாகவோடே ஆத்துக்காரரைப் பாருங்கோ......!"

"அந்த அசட்டுச் சனியனை நான் தினம் பார்த்துண்டுதானிருக்கேன்! ஊரெல்லாம் எட்டு அவுன்ஸ் அரிசியிலே காலக்ஷேபம் பண்ணிண்டிருக்கிறச்சே, நீ என்ன ஒசத்தியோ, புரியலே......!"

மீனாக்ஷி அழுகை பீறிக்கொண்டு வர, "பேசறத்தைப் பார்! நான்தான் கொட்டிக்கிறேனாக்கும்! புருஷாளுக்கென்ன, ஹோட்டல்லே மூக்கைப் பிடிக்கத் தின்னுட்டு வந்துடறது!" என்று சம்பந்தமில்லாமல் எதையோ உளறிவிட்டு, விசித்து விசித்து அழ ஆரம்பித்துவிடுவாள்.

ஆபீஸில் அசுர வேலை செய்து விட்டு நிம்மதியை நாடி வீடு திரும்புவதற்குப் பதில் "இன்றைக்கு என்ன காத்திருக்கிறதோ!" என்ற திகிலுடன்தான் ரகு தினம் வீட்டுக்குள் நுழைவான். காப்பியைக் குட்டிச்சுவராக்கிவிட்டு, சர்க்கரை இல்லை என்ற சால்ஜாப்பையும், வெண்டைக்காய் வேகாததற்கு விறகு எரியாத காரணத்தையும், அரிசியில் அன்னியப் பொருள்கள் இருப்பதற்கு, அவன் அரிசி வாங்கி வந்த அழகையும் சவாலையையும் அவன் சொல்லிச் சொல்லிக் காண்பித்துப் பேசுவதைக் கேட்கும்போதெல்லாம் ரகுவுக்கு ஆத்திரமும் கோபமும் பொங்கி வரும்.

நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வந்தது. எதற்கெடுத்தாலும் சண்டை! ஒருநாள் சண்டைப் புயல் வேகமாக அடித்தது. "இவ்வளவு கஷ்டத்தையும் அநுபவிக்கணும்னு என் தலையிலே பகவான் ஒண்ணும் எழுதலே! நான் எங்காத்துக்குப் போயிடறேன். நீங்கள் நிம்மதியா ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டுண்டு இருங்கோ!" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள் மீனாக்ஷி.


ரகு கோபமே உருவெடுத்தான். "கம்ப ஒட்டே இந்த உருட்டலெல்லாம் நடக்காதம்மா! இப்பவே கட்டு மூட்டையை! உன்னை கப்பித்தான் ஜென்மமெடுத்தேன்னு நெனைச்சியோ? தாராளமா போ!" என்று சொல்லி விட்டு, அன்று இரவே கும்பகோணம் போகும் தன் நண்பர் குடும்பத்துடன் மீனாக்ஷியை அனுப்பி விட்டான்.

★

நான் சண்டை போட்டுவிட்டு வந்ததாகவே மீனாக்ஷி யாரிடமும் சொல்லவில்லை. விளையாட்டாக மூன்று மாதங்கள் ஓடி விட்டன. துஷ்யந்தனைப் பிரிந்த சகுந்தலையின் மனவேதனை அவளையும் பற்றிக் கொண்டது. "மீனுவை அவன் ஆம்படையான் தள்ளி வைச்சுட்டான்!" என்று வம்பர் மகாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறியது. சில விடாக்கண்டர்கள் தங்கள் பெண்களின் ஜாதக சகிதமாக ரகுராமனை வலை போட்டுப் பிடிக்க முயன்று வந்தார்கள்.

ரகுராமனோ 'கல்யாணமாகியும் பிரும்மசாரி' என்ற வசனத்தின் முழு அர்த்தத்தையும் புரிந்துகொண்டு, 'எப்போ வருவாளோ!' என்று ஏகாங்கியாய் ஏங்கிக் கொண்டிருந்தான். இருந்தாலும் மாப்பிள்ளை முறுக்கும், திமிரும் அவனைப் பிடிவாதமாக இருக்கச் செய்தன. "மாமனாரே பெண்ணைக் கொண்டு வந்து விடட்டும். மீனாக்ஷியே வந்து மன்னிப்பு கேட்கட்டும்!" என்று அவன் காத்திருந்தான். ஆனால் ராமநாதய்யர் ரகுவின் மாமனாராயிற்றே!

"அவன் இடக்கிறான், கழுதை! தன்னாலே வந்து ஒருநாள்



அழைச்சிண்டு போறான்!" என்று சும்மா இருந்து விட்டார்.

ஆனால், "என்னா! நீங்களும் மாப்பிள்ளைக்கு ஒரு லெட்டரும் எழுத மாட்டேங்கிறேள்; அவனும் ஒரு கடிதாசும் எழுதலே! இப்படியே எவ்வளவு காலந்தான் காத்திண்டிருக்கிறது? அரிசி ரேஷன் ஒரு வாரத்துக்குப் போறமாட்டேங்கிறது. மீனுவுக்கு 'டெம்பரரி' ரேஷன் எழுதிண்டு வாங்கோன்னா பேசாமே இருக்கேளே!" என்று மனைவி புகார் செய்தது, ராமநாதய்யருக்குச் சரியென்றே பட்டது. போய் விசாரித்ததில் ரேஷன் ஆபீஸர் சென்னையில் அவள் ரேஷன் 'கான்ஸல்' பண்ணியாகி விட்டதா என்பதைத் தெரிந்து கொண்டுதான் கும்பகோணத்தில் 'டெம்பரரி' ரேஷன் கொடுக்க முடியுமென்று சொல்லி விட்டார்!

★

"ஸார்! மிஸ்டர் ரகுராமன் இங்கேதான் இருக்கிறாரா?" என்ற ரேஷன் இன்ஸ்பெக்டர் குரலைக் கேட்டு, ரகுராமன் வெளியில் வந்து தான்தான் என்று தெரிவித்துக் கொண்டான்.

"ஒங்க 'ஒய்ப்' கும்பகோணத்தி லிருக்கிறாரா?"

"ஆமாம்."

"எப்போ வருவார்?"

"தெரியாது!"

"நீங்க அவா ரேஷனை 'கான்ஸல்' பண்ணலே போலே யிருக்கே! ரொம்பப் பெரிய குற்றமாச்சே, அது? நான் உங்களைச் 'சார்ஜ்' பண்ண வந்திருக்கேன்!"

ரகுராமனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. இவ்வளவு நாள் மானேஜர் வீட்டுக்குத் தன் ரேஷன் கார்டைத் தானம் கொடுத்தது எவ்வளவு மகத்தான குற்றம் என்பதை உணர்ந்தான். "இல்லே ஸார்! ஒரு வாரத்தில் திரும்பி விடுவதாகத்தான் போனாள். அதனாலேதான் நான் ரேஷனை 'கான்ஸல்' பண்ணாமல் இருந்தேன். ஒவ்வொரு வாரமும் ஏதோ அசௌகரியம் ஏற்பட்டு, அவள் இன்று வரையில் வரவில்லை!" என்ற இமாலயப் பொய்யை அசட்டுச் சிரிப்புடன் அநாயாசமாகப் பகர்ந்தான்.

"சரிதான் மிஸ்டர்! இந்த 'வில்லி எக்ஸ்க்யூ'ஸெல்லாம் இருக்கட்டும். அடுத்த வாரம், அதாவது வியாழக்கிழமை ஒங்க 'ஒய்ப்' வீட்டிலே இல்லாட்டா, நான் உங்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க நேரிடும்!" என்று சொல்லிவிட்டு, ரேஷன் இன்ஸ்பெக்டர் போய்விட்டார்.

அன்றே கும்பகோணத்திலிருந்து ரகுவுக்கு ஒரு கடிதம் வந்தது.

கும்பகோணம்
5—11—47.

அன்புள்ள ......க்கு.

நீங்கள் சௌக்கியமென்று நினைக்கிறேன். அப்பாவும் அம்மாவும் உங்களை அவசியம் இங்கே வரும்படி எழுதச் சொன்னார்கள். மற்றவை நேரில்.

இப்படிக்கு,
தங்கள் பிரியமுள்ள
மீனு

மறுநாள் சென்னை. மீனுக்ஷிக்கு சென்னையிலிருந்து ஒரு கவர் வந்தது.

சென்னை
6—11—47

அன்புள்ள மீனு,

உன் கடிதம் கிடைத்தது. திங்கள் காலை அங்கு வந்து சேருகிறேன். ஸ்டேஷனுக்கு சின்ன அம்பியை அனுப்பினால் போதும்.

இப்படிக்கு,
உன் பிரியமுள்ள
ரகு.

★

தான் நினைத்தபடி மாப்பிள்ளை சரணாகதியடைந்ததால் ராமநாதய்யருக்கு எல்லையற்ற சந்தோஷம். ஊரார் கண்டபடி பேசுவதற்கு இடம் கொடாமல் மாப்பிள்ளை வந்து சேர்ந்தது பற்றி மாமியாருக்கு அளவற்ற திருப்தி. தான் எழுதியதால் தான் வந்தார் என்ற கர்வமும் ஆனந்தமும் மீனுக்ஷிக்கு. மாப்பிள்ளை முகத்தில் மாத்திரம் அசடு வழிந்து கொண்டிருந்தது.

அன்று இரவு மீனுக்ஷிக்கும் ரகுவுக்கும் நீண்ட சம்பாஷணை நடந்தது:

"என்ன, நேத்து ராத்திரி என்னோடே 'லெட்டரை' வாசிக்கலியா?" என்று கேட்டான் ரகு.

"என்ன அப்படி கேட்கிறேள்? இந்தப் பாழும் ரேஷன் நம்மை இவ்வளவு நாள் பிரிச்சு வைச்சு வேடிக்கை பார்த்தது போதாதா?" என்றாள் மீனுக்ஷி.

"சீ, அசடு! ரேஷனை வையாதே! இதே ரேஷன்தான் நம்மை இவ்வளவு சீக்கிரம் கூட்டி வைச்சு, விளையாட வைக்கிறது!" என்று சொல்லி, அவள் கன்னத்தில் விளையாட்டாக கிமிண்டினான் ரகு.

அவன் சொன்னதின் உட்கருத்து அப்போது மீனுக்ஷிக்குப் புரியவில்லை!

பாரதி மண்டப நிதி

சரஸ்வதி ஸ்டோர்ஸ், சென்னை (கான சரஸ்வதி டி. கே. பட்டம்மாளின் பாரதி மண்டப இசைத் தட்டு விற்பனைக் கணக்கு)	2,500	0	0
திருமகள் மில்ஸ் லிமிடெட், குடியாத்தம்	1116	0	0
ஸ்ரீ எம். என். மூனுசாமி, காங்கிரஸ் ஊழியர், திண்டுக்கல்	611	1	1
திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதிகள்	500	0	0
பாரதி அன்பர்கள், பான்ரா (ஸ்ரீ ஏ. பி. மேனன் மூலம்)	115	0	0
ஸர்காம் சுரங்கம் உத்யோகஸ்தர்கள் (ஸ்ரீ என். ரெங்கசாமி மூலம்)	101	6	0
பாரதி அன்பர்கள், திண்ணனூர்	101	4	0
ஸ்ரீ வி. கே. சிவப்பிரகாசம் பிள்ளை, கொழும்பு	101	0	0
மாணவர்கள், நைசாம் கலாசாலை, ஹைதராபாத்	100	0	0
ஸ்ரீ கே. ஏ. என். பத்மநாபன், திருப்பத்தூர்	61	0	0
ஸ்ரீ ஆர். நாகரத்தின நாயக்கர், பூ வியாபாரம், சென்னை	58	0	0
ஸ்ரீ பால சரஸ்வதி லிமிடெட், திருநெல்வேலி	51	0	0
ஸ்ரீமதி சங்கிலிவீர நாச்சியாள், ஜமீன்தாரிணி, அழகாபுரி	51	0	0
ஸ்ரீ பி. என். வெங்கடேஸ்வரன், கோயமுத்தூர்	51	0	0
குலசேகரப்பட்டணம் அன்பர்கள், பாரதிநிலையம் ஸ்ரீ வீரசிவ சுப்ரமணியம், மூலம்	50	0	0
ஸ்ரீ கே. கே. பத்மநாபய்யர், ஹோட்டல் முதலாளிகள் சங்கம், மேட்டுப்பாளையம்	50	0	0
இராணுவத் தமிழர்கள், பூனா (ஸ்ரீ டி. என். செங்கமலம் மூலம்)	39	12	0
என். எம். டபிள்யூ. ஆபீஸ், இளைஞர் சங்கம், கரக்பூர்	38	0	0
பம்பாய் பாரதி அன்பர்கள், (ஸ்ரீ திருமூர்த்தி சுப்பிரமணியம் மூலம்)	32	0	0
மேட்டூர் கெமிகல்ஸ் உத்யோகஸ்தர்கள் (ஸ்ரீ பி. ஸ்ரீநிவாஸன் மூலம்)	31	0	0
மோல்மேன் ஜுன் நகரத்தார், பர்மா	30	0	0
ஸ்ரீ டி. என். ராமச்சந்திரன், பாரதி வாசகசாலை, மாயனூர்	30	0	0
மல்லாபுரம் அன்பர்கள், ஸ்ரீமதி கவேலாசநு கோபாலன் மூலம்	29	0	0
குற்றாலம் அன்பர்கள், ஸ்ரீ என். பார்த்தசாரதி நாயுடு மூலம்	25	0	0
மெஸர்ஸ் விஸ்வநாதன் அண்டு கம்பெனி, சென்னை	25	0	0
ஸ்ரீ என். வி. என். வீராமரெட்டியார், கல்வி ஏஜெண்ட் , நாட்டான்	25	0	0
பேர்ணாம்பட்டு செந்தமிழ் மாணவர் கழகம், இஸ்லாமியா உயர்நிலைக் கலாசாலை (ஸ்ரீ வி. கோபாலன் மூலம்)	25	0	0
மண்டல மாணிக்கம் கிராமவருக் (ஸ்ரீ டி. ஸ்ரீநிவாஸன் மூலம்)	25	0	0
டாக்டர் டி. கே. சீதாராம், பல்லடம்	25	0	0
இலங்கைத் தமிழ் அன்பர்கள், ஸ்ரீ பி. ஆர் ஆறுமுகம். எல்பிட்டியா, மூலம்	23	0	0
பங்களூர் அன்பர்கள், ஸ்ரீமதி எஸ். பி. சீதம்மாள் மூலம்	22	0	0
கள்ளிப்பட்டை அன்பர்கள் ஸ்ரீ கே. ஆர். பரமசிவ கவுண்டர் மூலம்	21	8	0
ஸ்ரீ கிருஷ்ண பவன் தொழிலாளிகள், மேட்டூர் (ஸ்ரீ ம. கி. பரத் மூலம்)	21	0	0
ஸ்ரீ எம். செங்கநாதன், தேரு சீடிங் ஷொப், மின்னலி, பர்மா	21	0	0
ஸ்ரீ என். அருணாசல தேவர், கோபால சமுத்திரம்	20	0	0
மதுரை இராமநாதபுரம் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை சிப்பந்திகள், மதுரை	20	0	0
தமிழ் அன்பர்கள், புனா. (ஸ்ரீ எஸ். பரமசிவம் மூலம்)	18	0	0
பிரோன் அன்பர்கள், ஸ்ரீ கே. சிவகுருநாதன் அண் சன்ஸ், எடியாண்டோட மூலம்	18	0	0
பி. பி. என். பஸ் தொழிலாளர்கள், மயிலாப்பூர் (ஸ்ரீ என். வைத்தியநாதஸ்வாமி மூலம்)	17	8	0
ஸ்ரீ வி. ராமச்சந்திரன், வெல்லிங்டன், நீலகிரி	17	0	0
கிராம நண்பன் கையெழுத்துப் பத்திரிகைச் சங்கம், கல்லிடைக் குறிச்சி	15	0	0
ஸ்ரீ ஆர். எம். ஸ்ரீநிவாஸம் பிள்ளை, முருக்கூர்	15	0	0
மதரூஸ் ரெஸ்டாரண்டு சிப்பந்திகள், கும்பகோணம்	15	0	0
நாக்பூர் அன்பர்கள், ஸ்ரீ கே. ஏ. ராவ், கல்வி ஏஜண்ட், மூலம்	15	0	0
நுங்கம்பாக்கம் சங்கீத வித்தியாலயம், சென்னை	14	4	0
ஸ்ரீ ஷண்முகானந்த பவன், தொழிலாளர், மதுரை	11	12	0
காரைக்குடி கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் உத்தியோகஸ்தர்கள் சங்கம், காரைக்குடி	11	0	0
மேட்டூர் மின்சார இலாகா தொழிற்சாலை பாரதி அன்பர்கள்	10	13	0
ஸ்ரீ பாரத சங்கீத வித்யாலயம், எழும்பூர்	10	4	0
ஸ்ரீ ஏ. கோபாலகிருஷ்ணனும் சகோதர சகோதரிகளும், கொண்டனூர்	10	0	0

வாலன் இலக்கிய சங்கம், செங்கல்பட்டு	10	0	0
உபாத்தியாயர்கள் சங்கம், இணைந்துகை வு	10	0	0
ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி, டெல்லி	10	0	0
ஸ்ரீ பி. ராமமூர்த்தி, மாதுங்கா	10	0	0
பாரதி வாசகசாலை, கல்லிடைக்குறிச்சி	10	0	0
ஸ்ரீ எம். சுந்தரம், கிராம காங்கிரஸ் கமிட்டி, திருப்புறம்பியம்	10	0	0
புனித யோவான்ஸ் கலாசாலை மாணவர்கள், பாளையங்கோட்டை	10	0	0
ஸ்ரீ கே. செல்லமுத்து, பீர்மேட், திருவாங்கூர்	10	0	0
ஸ்ரீ எம். வி. முத்துசேஷன், மேலமங்கலம்	7	0	0
போர்டு உயர்தர எலிமெண்டரி பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும், தலைநாயர், தஞ்சை	6	8	0
ஸ்ரீ எம். கோபாலகிருஷ்ணன், டன்பாட்	6	8	0
போர்டு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும், இராசாமடம் (ஸ்ரீ எம். கருப்பய்யன் மூலம்)	6	8	0
ஸ்ரீ எம். இசக்கியப்பன், ஆறுமுகனேரி	5	12	0
ஸ்ரீ எஸ். எஸ். நாகேஸ்வரன், 'கல்கி' ஏஜெண்டு, பேரூர்	5	0	0
ஸ்ரீ எஸ். வி. ரமணி, 'கல்கி' ஏஜெண்டு, கூனூர்	5	0	0
ஸ்ரீ எஸ். டி. சிவராமன் செட்டியார், காரைக்குடி	5	0	0
ஸ்ரீ கே. கோபாலகிருஷ்ணன், தியாகராயநகர்	5	0	0
ஸ்ரீ எஸ். வி. ராம், ஆசிரியர் "ரவி", மதுரை	5	0	0
கோவை கூட்டுறவு பால் சப்ளை யூனியன் தொழிலாளர் சங்கம் (எம். தங்கவேலு மூலம்)	5	0	0
ஸ்ரீமதி கே. ஞானம்மாள், மயிலாப்பூர்	5	0	0
ஸ்ரீமதி எம். சரோஜினி வேதாந்தம், கருங்குழி	5	0	0
ஸ்ரீமதி நாராயணி நாகேஸ்வரன், நியூ டெல்லி	5	0	0
ஸ்ரீ ந. வி. க. பெருமாள் நாயக்கர், வெள்ளைப்பட்டி புதூர்	5	0	0
ஸ்ரீ கே. எஸ். பாலசுப்பிரமணியம், வாலாஜிராயன்பட்டினம்	5	0	0
ஸ்ரீ எம். பழநியாண்டி, வாருகலை, விஜோன்	5	0	0
ஸ்ரீ அ. மலைச்சாமிக் கோன், அம்பலத்தாடி கிராமம், மதுரை	5	0	0
ஸ்ரீ டி. எஸ். சுப்பய்யா செட்டியார், அருப்புக்கோட்டை	5	0	0
ஐந்து ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்	10	0	0
[ராணிப்பேட்டை ஸ்ரீ கே. ஆர். கல்யாணராமய்யர் மூலம் வரவு ரூ. 197-க்கு விவரம்:]			
ஸ்ரீ வேலம் குப்புஸ்வாமி செட்டியார்	50	0	0
ஸ்ரீ எம். ஆர். விஜயராகவன்	20	0	0
ஸ்ரீ குருஸ்வாமி	15	0	0
ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி	15	0	0
ஸ்ரீ ஏ. டி. பூபதி	11	0	0
ஸ்ரீ வி. கே. ஷண்முகம்	10	0	0
ஸ்ரீ எம். பழனியப்பா	10	0	0
ஸ்ரீ எம். மாணிக்கம்	10	0	0
ஸ்ரீ ஏ. கே. ஷண்முகநாதன்	10	0	0
ஸ்ரீ என். சின்னசாமி	10	0	0
ஸ்ரீ ஏ. எம். ஆர். எம். முத்தும் பழனியப்ப செட்டியார்	10	0	0
ஸ்ரீ எஸ். ஏ. எஸ். எம்.	6	0	0
டாக்டர் ஸ்ரீ டி. வி. கோபாலகிருஷ்ணன்	5	0	0
ஸ்ரீ கே. ரா. ராஜாராம்	5	0	0
ஸ்ரீ ச. ஆறுமுகம் பிள்ளை	5	0	0
ஸ்ரீ ஆர் கோவிந்தசாமி	5	0	0
ஐந்து ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்	5	0	0
[தென்னூர் 'கிருஷ்ணபவன்' ஸ்ரீ கே. ஆர். ராமகிருஷ்ணன் மூலம் வரவு ரூ. 96—8—0-க்கு விவரம்]:			
ஸ்ரீ கிருஷ்ண பவன்	25	0	0
ஸ்ரீ ஆர். ராம அய்யர்	10	0	0
ஸ்ரீ ஆர். சிவசுவாமி	10	0	0
ஸ்ரீ கே எஸ். நாராயண அய்யர்	5	0	0
ஸ்ரீ எம். எஸ். சகஸ்ரநாமம்	5	0	0
ஸ்ரீ டி. வி சுப்பிரமணிய அய்யர்	5	0	0
ஸ்ரீ பரமேஸ்வரன் நாயர்	5	0	0
ஸ்ரீ பரமானந்த ராவ்	5	0	0
ஐந்து ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்	26	8	0
(ஐ. ஏ. எஸ். 16-வது கேவல்ரி ஸ்ரீ எஸ். தேவராஜ் மூலம் வரவு ரூ. 60-க்கு விவரம்):			
ஸ்ரீமதி சகுந்தலா தியாகராஜ்	10	0	0
ஸ்ரீ எல். வீரபாகு	5	0	0
ஸ்ரீ சந்தானம்	5	0	0
ஸ்ரீ ஆர். சுந்தரமய்யர்	5	0	0
ஸ்ரீ எம். எஸ். மாதவன் நாயர்	5	0	0
ஸ்ரீ எஸ். வி. தனபாலன்	5	0	0
ஸ்ரீ பி. டி. அநந்தகிருஷ்ணன்	5	0	0
ஸ்ரீ வி. ஜி. சுவாமிநாதன்	5	0	0
ஸ்ரீ எச். பொன்னுசாமி	5	0	0
ஸ்ரீ தம்புசுவாமி	5	0	0
ஸ்ரீ என். கிருஷ்ணன்	5	0	0
[இலங்கை, கோசலான்டே, ஸ்ரீ ஏ. கருப்பண்ண பிள்ளை மூலம் வரவு ரூ. 55-க்கு விவரம்:]			
ஸ்ரீ ஆ. கருப்பண்ண பிள்ளை, கொஸ்லாந்தை	25	0	0
ஸ்ரீ ஆ. தெ. ஆண்டியப்ப பிள்ளை, கொஸ்லாந்தை	15	0	0
ஸ்ரீ ஆ. பெரியண்ண பிள்ளை, கொஸ்லாந்தை	10	0	0
ஸ்ரீ வெள்ளசாமி, கொஸ்லாந்தை	5	0	0
(காரைக்குடி கலாநிலையம் ஸ்ரீ இ. சிவராமன் மூலம் வரவு ரூ. 35-க்கு விவரம்)			
இந்தியன் பாங்கி உத்யோகஸ்தர்கள், காரைக்குடி	20	0	0
ஐ. ஓ. பி., காரைக்குடி	5	0	0
ஸ்ரீ மலையப்ப அய்யர், எஸ். எம். பிரதர்ஸ், காரைக்குடி	5	0	0
ஸ்ரீ ராமரத்னம், புதுக்கோட்டை	5	0	0
ஆக ரூ.	6,980	4	1
ஏற்கெனவே வரவு ரூ.	35,477	12	11
ஆக மொத்தம் ரூ.	42,458	1	0


எழுதுவதில் மிகமிக நேர்த்தியானது:

அதனால்தான் யுனைட்டட் ஸ்டேட்ஸில்

எவர்ஷார்ப்

பேனாக்கள் ஏராளமாக

செலவாகின்றன



எவர்ஷார்ப் பேனாவால் எழுதும் பொழுதே அதுவன் பேனாக்களில் தலைசிறந்தது என்பதை அறிந்து கொள்ளுவீர்கள். அசல் தங்கத்தால் செய்யப்பட்ட மாஜிக் பாயிண்ட் உருவாகவும் வழவழப்பாகவும் நிச்சயமாக எழுதுகின்றது. வான விமானத்திலிருந்து எழுதும்பொழுதும் மாஜிக் பீட் இங்க் கொட்டாமலும் ஒழுகாமலும் தடை செய்கிறது. தரைமட்டத்தில் இருக்கும் பொழுதும் அப்படியேதான். மாக்ஸம் மீஸ் முறை இங்க் நிரப்புவதில் உலகத்திலேயே சிறந்த வழியாகும். அரைக்ஷணத்திற்குள் இங்கை நிரப்பி விடுகிறது.

இந்த அழகிய செட்டில் ஒரு பேனாவும் கிரீட்டச் பென்சிலும் இருக்கின்றன. தனி முறையில் உள்ளன. கலர்களும் நீலமான கிளிப்புகளும் பிரகாசிக்கும் பொன்களில் உள்ளன. பாரல்கள் விலையுயர்ந்த பிளாஸ்டிக் வர்ணத்தில் அமைக்கப்பட்டுள்ளன. கிரீட்டச் பென்சிலின் பட்டனை கட்டைவிரலால் அழுத்தியவுடனே எழுதுவதற்கு முனை வெளியில் வருகிறது. இன்றைக்கே எவர்ஷார்ப்பை வாங்குங்கள்.

நேர்த்தியானதை அணியுங்கள்

அணியுங்கள் எவர்ஷார்ப்

	செட்	பேனா	பென்சில்
	ரூ.	ரூ.	ரூ.
[illegible]	75	—	—
[illegible] பேனா	67	45	24
[illegible]	43	27	18
[illegible]	26	18	10
[illegible] பென்சில்	—	—	7/8

[illegible]

ASARTS E25 TAMIL 10.

சென்னை மாகாணத்திற்கும் சமஸ்தானங்களுக்கும் ஸ்டாக்கிஸ்ட்டுகள் :

ஹிக்கின் பாதம்ஸ், சென்னையும், பிராஞ்சுகளும்

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி

194. ராமபாணம்!

அநுமனது வேண்டுகோளுக்கு இணங்கி ராம லக்ஷ்மணர் சுக்கிரீவனது அரண்மனைக்குப் போகிறார்கள். அங்கே அவர்களுக்குச் சகலவித உபசாரமும் விருந்தும் நடக்கிறது. அத்தனை உபசாரத்திலும் விருந்திலும் ஒரு குறையைக் கண்டான் ராமன். சுக்கிரீவனது மனைவி வந்து உபசரிக்கவில்லை. ஏதோ ஒரு காரணத்தினால் அந்தக் குறை என்பதைக் கண்டு கொண்டான். விசாரித்தான். அநுமன் நடந்த வரலாற்றைச் சொன்னான்:

வாலி என்பவன் சுக்கிரீவனுடைய தமையன். அவன் கிஷ்கிந்தைக்கு ராஜாவாக இருந்து ஆண்டு வந்தான். அறிவிலும் கல்வியிலும் புஜபலத்திலும் அவனுக்கு ஈடானவர் உலகத்தில் இல்லை என்று சொல்லலாம்.

மாயாவி என்ற பகையரசன் வாலியை எதிர்த்து வந்தான். வாலி அவனோடு போராடி வென்று துரத்தினான். கடைசியாக அந்த மாயாவி வெகு தூரம் போய் யாருக்கும் தெரியாத ரகசிய வழியாக எங்கேயோ ஓடி விட்டான். வாலியும் அந்த வழியாக அவனைத் தொடர்ந்து போனான். போகும்போது கணவாயில் சுக்கிரீவனை இருந்து காத்துக் கொண்டிருக்கும்படியாகச் சொல்லிவிட்டுப் போனான்.

தமையன் சொன்ன கட்டளைப்படி சுக்கிரீவனும் காத்துக்கொண்டே இருந்தான். நாட்கள் சென்றன. மாதங்கள் சென்றன. வாலி திரும்பவில்லை.

தமையன் ஏதோ காரணத்தால் உயிர் இழந்து விட்டான் என்று எண்ணி, கணவாயை ஒரு பெரும் பாறையைக் கொண்டு மூடிவிட்டான்.

ஊருக்கு வந்து பெரியோர்களைக் கலந்ததில் அவர்களும் சொன்னார்கள் — தமையன் இனி வருவதற்கில்லை, சுக்கிரீவனே இனி ராஜ பதவியை ஏற்று நாட்டை ஆள வேண்டும் என்பதாக. அப்படியே சுக்கிரீவனும் ஆண்டு வந்தான். குடிகள் எல்லாருக்கும் திருப்தி உண்டாகும் முறையில் ஆண்டு வந்தான்.

இப்படி அரசியல் நடந்து கொண்டிருக்கும்போது, வாலி எங்கெங்கெல்லாமோ போய் விட்டு மீண்டும் கணவாயை அடைந்தான். பாறையை வைத்து வழியை அடைத்திருந்தது. பாறையைத் தள்ளி விட்டு வெளியே வந்தான். அங்கே நின்றவர்களை விசாரித்தான். நடந்த வரலாற்றை அவர்களும் சொன்னார்கள். வந்து விட்டது கோபம் வாலிக்கு. தன்னைக் கொல்ல வேண்டுமென்றே சுக்கிரீவன் பாறையை வைத்து வழியை அடைத்தான், ராஜ்யத்தையும் கைப்பற்றிக் கொண்டான் என்ற விஷயத்தை எண்ண எண்ண ஆங்காரம் மூண்டது. 'அப்படியா? சுக்கிரீவனை இப்போதே கொன்று விடுகிறேன்' என்று ஆரவாரித்துக் கொண்டு சென்றான்.

சுக்கிரீவன் உயிர் தப்புவதற்காக எங்கெல்லாமோ ஓடினான். கடைசியாக இந்த இடத்தைப் புகலிடமாகக் கொண்டு தங்க நேர்ந்தது.

ராஜ்யம் மீண்டும் வாலி வசம் போய் விட்டது. ஆனால் அதோடு நிற்கவில்லை விஷயம். சுக்கிரீவனது அருமை மனைவியையும் கைப்பற்றிக் கொண்டான். இன்னும் வாலியின் கொடுமை தணிந்ததாக இல்லை.

சுக்கிரீவனுக்கு வேண்டியவர்களாய் நாங்கள் சிலர் இங்கே உடன் வசிக்கிறோம்.

இப்படியாக சுக்கிரீவனது வரலாற்றைச் சொல்லி முடித்தான் அநுமன்.

பொய்யிலா தவன்
வரன்முறை இம்மொழி
புகல,—

ஐயன், ஆயிரம்
பெயருடை அமலர்க்கும்
அமலன்,

வையம் நுங்கிய
வாயிதழ் துடித்தது,
மலர்க் கண்

செய்ய தாமரை
ஆம்பலம் போதெனச்
சிவந்த.

[பொய்யிலாதவன் : அநுமன் : வரன்முறை இம்மொழி புகல : சுக்கிரீவனது வரலாறான இந்த வார்த்தைகளைச் சொல்ல : ஐயன், ஆயிரம் பெயருடை அமலர்க்கும் அமலன் : எம்பெருமானான ராமன். அதாவது ஆயிரம் நாமங்களுக்கு உரியவனும், புனித தேவதைகளுக்கெல்லாம் புனித தேவதையுமான விஷ்ணு மூர்த்தியின் : வையம் நுங்கிய வாயிதழ் துடித்தது : உலகத்தையே அமுது செய்த வாய் இதுதானே என்று சொல்லக் கூடிய அரிய செவ்வாயின் இதழ் துடித்தது : மலர்க் கண் செய்ய தாமரை : விரிந்த கண்களான செந்தாமரைகள் ; ஆம்பல் அம் போது எனச் சிவந்த : செவ்வாம்பல் போலவே சிவந்து விட்டன.]

• • •

ராமன் என்றால் யார் : ஏதோ சிற்றன்னை ஒரு வார்த்தை சொன்னாள். அதற்காகத் தனக்கு உரிமையான, நிலையான, ஒரு பெரும் ராஜ்யத்தையே தம்பிக்குக் கொடுத்தவன். அந்த ராமனது காதில் அல்லவா விழுகிறது அநுமன் சொன்ன வார்த்தை!

சரம் நீங்கிய
சிற்றவை சொற்றனள்
என்ன,

வாரம் நீங்கலா
இளவற்(கு) மன் அர(சு)
உரிமைப்

பாரம் தந்தவன்,—
பரிவிலன் ஒருவன், தன்
இளையோன்

தாரம் வெளவினன்
என்றசொல் தரக்குமா(று)
உள தோ!

[சரம் நீங்கிய சிற்றவை : இரக்கம் இல்லாத கைகேயி : சொற்றனள் என்ன : ஏதோ சொன்னாள் என்ற காரணத்தினால் : வாரம் நீங்கலா இளவற்கு : அன்பு குறையாத பரதனுக்கு : மன் அரசு உரிமைப் பாரம் தந்தான் : நிலையான ராஜ்ய பாரத்தைக் கொடுத்த ராமன் : பரிவிலன் ஒருவன் தன் இளையோன் தாரம் வெளவினன் : இரக்கமற்ற ஒரு பாவி தன் தம்பியின் மனைவியை அபகரித்தான் :]

• • •

ராமனுக்குத் தம்பிகள் என்றால் உயிர். தனக்கு எல்லகேடு வந்தாலும்





சகித்துக் கொள்ளக் கூடும்; ஆனால் தம்பி ஒருவனுக்குக் கஷ்டம் வந்துவிட்டால் சகிக்க முடியாது.

இப்பேர்ப்பட்ட ராமனுக்கு மனைவியை இழந்ததனால் உண்டான கடுந்துன்பம் இதயத்தைக் குத்திக் கிளறிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் ஒருவன் தன் தம்பியின் மனைவியை அபகரித்தான் என்று கேட்டால் மனசு என்ன ஆகும்? ஒரே கொதிப்பாய்க் கொதித்து விட்டது. கோபம் ஒரு வெறியாக மாறிவிட்டது.

சுக்கிரீவனிடத்தில் இரக்கமும், அவன் தமையன் வாலியினிடத்தில் கோபமும் சேர்ந்து பொங்கிப் புரண்டு வெளிவருகின்றன.

உலகம் ஏழினோ(டு)
ஏழும்வந்(து) அவன்உயிர்க்(கு)
உதவ
விலகும் என்னினும்,
வில்லிடை வாளியின்
வீட்டித்,
தலைமை யோடுநின்
தாரமும் உனக்கின்று
தருவேன்,
புலமை யோய் அவன்
உறைவிடம் காட்டெனப்
புகன் றான்.

[உலகம் ஏழினோடு ஏழும் வந்து: பதினாலு உலகத்திலுள்ளவர்களுமே வந்து: அவன் உயிர்க்கு உதவ விலகும் என்னினும்: அந்தப் படுபாவியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக வந்து போர் செய்த போதிலும்: வில்லிடை வாளியின் வீட்டி: என் வில்லிலிருந்து புறப்படும் அம்புகளால் எல்லாரையும் கொன்று: தலைமையோடு நின் தாரமும் உனக்கு இன்று தருவேன்: அரசுரிமையோடு உன் மனைவியையும் நான் உனக்குத் தருகிறேன்; புலமையோய்: அறிவில் சிறந்த சுக்கிரீவனே!]

தம்பிக்குக் கொடுமை செய்தான் வாலி என்றதும், கோபாவேசமும் வீர வெறியும் ஒன்று சேர்ந்து ராமனது தோள்களைத் திமிரும் தினவும் கொள்ளச் செய்தன. ஏதோ வாலி எதிரில் நிற்கிறதாக உருவெளித் தோற்றம் காணவும், அப்படியே ஒரு பாணத்தை எடுத்து வில்லில் வைத்து வேகமாக எய்தான். அவ்வளவுதான்; எதிரில் வரிசையாக நின்ற மராமரங்கள் ஏழையும் ஊடுருவி அப்பால் சென்றது பாணம். ராமபாணம் என்றால் இன்னது என்று சுக்கிரீவனும் அநுமனும் தெரிந்து கொண்டார்கள்.

பாரமற்ற தலையும் பளபளப்பான வதனமும்!

உடலில் கனமான உணர்ச்சியும், கண்கள் ஒளியிழப்பதும், சரீரம் சுருங்குவதும் தடங்கலான மல பிரவிருத்தி ஏற்படுவதனால்தான். அவற்றை போனோமின்ட் உடனே நிவர்த்தி செய்துவிடும். கிரமமாகக் குடலை சுத்தி செய்துகொள்வது உங்கள் சுக வாழ்வுக்கு இன்றியமையாதது என்பதை மறவாதீர்கள்.

சுலபமாக மலமிளக்கும் உன்னத சஞ்சீவி

ரூ. 1-2-0, ரூ. 0-7-0 ஆகிய இரு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜண்டுகள்:

ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி,
99-A. அரமனைக்காரத் தெரு, மதராஸ்



No. 6



மழையிலடிபட்டு ஜன்னியினால் கஷ்டப்பட வேண்டாம்

முதல் தடவையாக தும்மும் போதும், குளிர் காற்றும்போதும் ஆரம்பத்திலேயே கிருமி நாசன சுவாஸ்காரண பெப்ஸை உட்கொள்ளுங்கள். வாயினுள் கரையும்போதே ஒரு பெப்ஸ் மிகவும் உன்னத மருந்து சத்துக்களை வெளிவிடுகிறது. அவை சுவாசத்தினால் சுவாசப்பைக்கு இழுக்கப்பட்டு வலிக்கு விதமளித்து மெல்லிய மிருதுவான தோல்களிலுள்ள ரணத்தை ஆற்றுகிறது தொத்து நோய்க்கிருமிகளைக் கொன்று, சுவாஸ நியதியைப் பலப்படுத்தி, சீதோஷ்ண நிலையினால் ஏற்படும் அபாயத்திலிருந்து உங்களை பாதுகாக்கிறது.

இருமல், ஜலதோஷம், தொண்டை வலி, முறை ஜுரம், மார்ச்சளி, மற்றும் இதர நெஞ்சு, சுவாசப்பை உபாதைகளுக்குப் பெப்ஸ் மிகவும் இன்றியமையாதது.

PEPS

எப்பொழுதும் கைவசம் வைத்திருங்கள்

பெப்ஸ்

கிருமி நாசன ஸ்வாச மாத்திரைகளைச் சப்பிடுங்கள்
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்



ஏஜண்டுகள்:—மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி. மதராஸ்

No. 8



சுதந்திரக் கோயில்

அக்ஷயம்

மத்தியானம் மூன்று மணி இருக்கும். நான் அப்பொழுதுதான் தூங்கி எழுந்திருந்தேன். ஏதாவது ஒரு புஸ்தகத்தை எடுத்துப் படிக்கலாம் என்று எண்ணி அலமாரியைத் திறந்தேன். அதிலிருந்த கெத்தே, ரூஸோ, மாஜினி, கீட்ஸ், ஷேக்ஸ்பியர், டால்ஸ்டாய், விக்டர் ஹ்யூகோ, மொபாஸான், டிக்கன்ஸ், ஸ்பென்ஸர், மெகாலே, மில்டன், மோலியர் முதலியவர்கள் தலையை நீட்டினர். யாரைப் படிக்கலாம் என்று ஒரு முடிவுக்கு வருவதற்குள்ளேயே வாசலில் ஒரு கார் வந்து நின்றது. 'யாராவது நண்பர்கள் வந்திருப்பார்கள். இந்தப் புஸ்தகங்களைக் கட்டிக்கொண்டு அழுவானேன்?' என்று எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே வேலைக்காரன் ஒரு 'விஸிட்டிங் கார்'டைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தான்.

அதில் நகரத்துப் போலீஸ் ஸூபரின்டெண்டின் பெயர் அச்சடிக்கப்பட்டிருந்தது. 'இந்த வேளையில் நம்மிடம் இவர் எதற்காக வருகிறார்?' என்று எண்ணினேன். அதற்குள் அந்த ஸூபரின்டெண்டே உள்ளே நுழைந்தார். நான் அவரைக் கைகுலுக்கி வரவேற்று, பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்கார வைத்தேன். அவர் ஓர் அதிகாரச் சிரிப்புச் சிரித்து, "இந்த வேளையில் வந்து உங்களுக்கு நான் சிரமம் கொடுப்பதற்காக மன்னிக்கவும்" என்றார்.

"என்ன விசேஷமோ?" என்று நான் மிகவும் வினயமாகக் கேட்டேன்.

அவர் தன் பாக்கெட் கோட்டை எடுத்துப் பிரித்து, அதற்குள்ளிருந்த ஒரு போட்டோவைக் காட்டி, "இவன் யார்

என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

நான் சற்றுப் பயந்த குரலில், "தெரியும்" என்றேன்.

"இவன் பெயர் என்ன?"

"ராமய்யா!"

"இவன் எங்கே இருக்கிறான்?" என்று போலீஸாருக்கே உரித்தான குறும்புப் பார்வையுடன் அவர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

"என் பங்களாவுக்கு எதிரே யிருக்கும் வீட்டில்தான் இருக்கிறான்."

"அவன் குடும்பத்தில் வேறு யார் இருக்கிறார்கள்?"

"அவனும் அவனுடைய தாயாரும்தான் இருக்கிறார்கள்."

"அவள் பெயர் என்ன?"

"ஜானகி."

"அவர்கள் குடும்பம் எதைக் கொண்டு நடக்கிறது?"

"அவனுடைய அப்பா என் வீட்டில்தான் கணக்குப் பிள்ளை வேலை பார்த்து வந்தார். அவர் ஜீவியகாலத்தில் சேர்த்துவைத்தது ஏதோ கொஞ்சம் இருக்கிறது. அதைக் கொண்டுதான் இப்பொழுது குடும்பம் நடக்கிறது. பையன் காலேஜில் படிக்கிறான். இன்னும் இரண்டு வருஷம் போனால் சம்பாதிக்க ஆரம்பித்துவிட மாட்டானா?...ஆமாம், இந்தக் கேள்வியெல்லாம் எதற்காகக் கேட்கிறீர்கள்?"

"சர்க்கார் சம்பந்தமாகத்தான் கேட்கிறேன். அதனால்தான் உங்களுக்கு இவ்வளவு சிரமம் கொடுக்கும்படியாகிவிட்டது."

"சிரமம் என்ன? நாங்கள்தான் தலைமுறை தத்துவமாக சர்க்கார்களுக்கு வேண்டியவர்களாயிற்றே! ......வேறு ஏதாவது......"

"உங்களுக்கு வேண்டியவன் என்ற முறையில் ஒரே ஒரு விஷயம் சொல்லி வைக்கிறேன். கூடுமான வரையில் அந்தக் குடும்பத்துடன் நீங்கள் அதிகத் தொடர்பு வைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. அதன் காரணத்தை நான் உங்களுக்கு இப்பொழுது சொல்லுவதற்கில்லை" என்று கம்பீரமான — ஆனால் மெதுவான குரலில் அவர் சொல்லிவிட்டுப் போனார்.

2

நான் ஜானகியம்மாளைக் கூப்பிட்டனுப்பி, "உன் பிள்ளை என்னவெல்லாமோ காலித்தனம் செய்கிறானாம்! அவனைக் கண்டிக்காமல் நீ இப்படியே செல்லம் கொடுத்துக் கொண்டிருந்தால், அப்புறம் நீதான் கஷ்டப்பட வேண்டி வரும்" என்று எச்சரித்தேன்.

"அவன் அப்படி யெல்லாம் போகிற பிள்ளை யில்லையே!" என்றாள் அவள்.

"இல்லாவிட்டால் போலீஸ் அதிகாரிகள் அவனைப் பற்றி விசாரிப்பானேன்? ஏதோ அவன் செய்துதான் இருக்கிறான்!" என்றேன் நான்.

அதே சமயம் ராமய்யா தன் தாயாரைக் கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான். என்னைப் பார்த்ததும் அவன் வணங்கிவிட்டு, "அம்மா, நீ இங்கே வந்து உட்கார்ந்து விட்டாயே! என் சகபாடிகள் எல்லாரும் வந்திருக்கிறார்களே! ஏதாவது 'டிபன்' செய்து கொடுத்தால், சாப்பிட்டு விட்டு நாங்கள் உலாவப் போவோமோ, இல்லையோ?" என்றான்.

அவனைப் பார்த்ததும் ஜானகியம்மாளின் முகத்தில் இருந்த சுருக்கங்கள் கூட



மறைந்து விட்டன. அவன் மகிழ்ச்சியுடன், "இதோ வந்து விட்டேன். ஆமாம், 'நீ என்னவெல்லாமோ துஷ்டத்தனம் செய்கிறாய்' என்று இவர் சொல்லுகிறாரே? அது நிசமா?" என்று கேட்டாள்.

"ஆமாம், நீங்கள் ஐந்தாறு பேர்வழிகள் சேர்ந்துகொண்டு சர்க்காருக்கு விரோதமாக என்னவெல்லாமோ சூழ்ச்சிகள் செய்கிறீர்கள் என்று கேள்விப்படுகிறேன். நிசம்தானா?" என்று நானும் கேட்டேன்.

"அப்படி யெல்லாம் நான் ஒன்றும் சூழ்ச்சிகள் செய்யவில்லையே! வேண்டுமென்று உங்களிடம் யாரோ கதை கட்டி விட்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. தேசத்தின் தற்கால நிலைமையையும், மானிடர்கள் மிருகங்களிலும் கேடு கெட்ட அடிமை வாழ்வு வாழ்வதையும் கண்டு நான் சில சமயம் மனம் குமுறியது உண்டு; அதைப் பற்றிச் சிலரிடம் சொன்னதும் உண்டு. ஆனால் சர்க்காருக்கு விரோதமாக நான் ஒன்றும் செய்ததில்லையே!" என்றான் ராமய்யா.

"தேசம் எப்படிக் குட்டிச் சுவராய்ப் போனால் உனக்கு என்ன? உன் வேலையோ படிக்க வேண்டியது. அதைச் செய்வாயா, வேண்டாத வேலைகளை யெல்லாம் இழுத்துப் போட்டுக் கொள்ளுவாயா?"

"இதைப் பற்றி யெல்லாம் நான் உங்களுடன் பேசத் தயாராயில்லை. மன்னியுங்கள்" என்று அவன் மிகவும் வணக்கமாகச் சொன்னான்.

உன்னுடைய குடும்பத்துக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். நீ செய்யும் அசட்டுக் காரியங்களை யெல்லாம் நான் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. கண்டிக்கத்தான் கண்டிப்பேன்!"

"நீங்கள் கண்டியுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் நீங்களோ ராஜபக்தர்; நானோ அதை வெறுப்பவன். இரண்டு பேருக்கும் எப்படி ஒத்துக் கொள்ளும்? உங்களுடைய வழிதான் உங்களுக்குச் சரியென்று தோன்றும்; என்னுடைய வழிதான் எனக்குச் சரியென்று தோன்றும்!"

'உன் வழி அப்படி என்ன நல்ல வழி அப்பா! சொல்லேன், பார்ப்போம். நானும் தான் தெரிந்து கொள்ளுகிறேனே!"

"எந்த ஒரு குறிப்பிட்ட மனிதனோ, சமூகமோ, தேசமோ, மற்றொரு மனிதனையோ, சமூகத்தையோ, தேசத்தையோ அழித்து விட்டு வாழ விரும்பினால், அதைத் தொலைத்துவிட்டு மறுகாரியம் பார்க்க வேண்டும் என்பது என் கொள்கை!" என்றான் அவன்.

"நீ அவரோடு சண்டை போட ஆரம்பித்துவிட்டாயே! பாவம், நம் வீட்டில் நாலு குழந்தைகள் தன்னந் தனியாக உட்கார்ந்திருக்கிறார்கள். நான் போகிறேன். நீ அவருடன் சண்டை போட்டுவிட்டு மெதுவாக வந்து சேரு!" என்று தாயார் தன் மகனிடம் சொன்னாள்.

பிறகு அவள் என்னைப் பார்த்து, "எனக்கு அதெல்லாம் ஏதாவது தெரிந்தால்தானே! நீங்களே அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லி அனுப்புங்கள்" என்றாள்.

அவள் போன பிறகு, "உனக்கு அவ்வளவு பலம் கிடையாது, அப்பா! வீணாக அந்த அவஸ்தையில் எல்லாம் மாட்டிக் கொள்ளாதே! நீதான் கஷ்டத்தில் மாட்டிக் கொண்டு மடிய வேண்டி வரும்!" என்றேன்.

"மடிவது என்பதுதான் இயற்கையின் நியமங்களில் ஒன்றாயிற்றே! அதற்காகப் பயப்பட முடியுமா? கடமையைச் செய்யும் பொழுது கடவுள் நம் பக்கத்தில் இருப்பார்!"

"அப்படியானால் நீ என்ன செய்யப் போகிறாய்?"

"என்னால் முடிந்ததைச் செய்வேன்!"

"ராஜத்துரோகம் செய்வாயா?"

"நிச்சயம்!"

"உன் மூளை எந்தப் புஸ்தகத்தைப் படித்து இப்படிக் குழம்பி விட்டதோ, புரியவில்லையே! இதெல்லாம் வேண்டாம். நான் சொல்லுவதைக் கேட்டால் கேள்; கேட்காவிட்டால் போ! அதற்குமேல் நான் என்ன செய்ய முடியும்?" என்றேன் நான்.

3

ஒருநாள் என் மனைவியும் ஜானகியம்மாளும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். நான் அவர்களண்டை போய், "என் ஜானகியம்மா, உன் பிள்ளையுடன் யார் யாரெல்லாம் வருகிறார்கள்?" என்று கேட்டேன்.

"எனக்கு அதெல்லாம் தெரியாது. அவனுடன் வருபவர்களெல்லாம் தங்கமான குழந்தைகள். சிரித்துப் பேசிக் கொண்டு அவர்கள் கொட்டம் அடிப்பதைக் கண்டால், எவ்வளவு இன்பமாக இருக்கிறது தெரியுமா?" என்றாள் ஜானகியம்மாள்.

"அது சரி, அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்றாவது உனக்குப் புரிகிறதா?"

"எனக்குப் புரியவில்லை. ஆனால் என்னைக் கண்டால் அவர்கள் 'அம்மா, அம்மா' என்று உயிரை விடுகிறார்கள். அவர்களில் ஒரு குழந்தை இருக்கிறான். அவன் சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறான். சிலம்பம் பழகுவதில், குஸ்தி போடுவதில், ஓடுவதில், சண்டை போடுவதில், ஏன், சாப்பிடுவதில் கூட அவன் ரொம்பக் கெட்டிக்காரனும்! ராமய்யா அடிக்கடி அவனைப் பற்றிச் சொல்லுவது உண்டு. ஒரு நாள் அந்தப் பையன் என் முகத்தைப் பார்த்துவிட்டு, 'அம்மா, நீதான் உண்மையில் பாரத மாதா! நீயும் கிழவி; அவளும் கிழவி. அவளுடைய இமய மலையும் வெளுப்பு; உன் தலை மயிரும் வெளுப்பு. படத்தை வைத்துக் கொண்டு 'நீதான் பாரத மாதா' என்று கூட நான் நிரூபித்து விடுவேன். உன் தலைதான் இமயமலையாம். நெற்றியில் ஆழமான இரண்டு மடிப்புகள் இருக்கிறதே, அதுதான் கங்கையும் யமுனையும். மூக்கு விந்தியமலை. மோவாய்க் கட்டைதான் கன்னியாகுமரி. முகத்தில் இருக்கிற மற்ற சுருக்கங்கள் எல்லாம் மலைகளும் நதிகளுமாகும். அம்மா, கொஞ்சம் என் கிட்ட வாயேன்! உன் தலை மயிரைப் பின்னாலிருந்து, இடது பக்கத்துத் தோளில் பறக்க விட்டுவிடுகிறேன்; அது பர்மாவாகி விடும். அது இல்லையென்றால் பாரத மாதாவுக்கு அழகே வராது' என்றான். எல்லாப் பையன்களும் ஒரேயடியாகக் கொல்லென்று சிரித்து விட்டனர். அவன் ரொம்பப் பொல்லாதவன்தான். என் தலை மயிரை சொன்னபடி இழுத்துவிட்டு 'பர்மா' தயார் செய்து விட்டான். பிறகு என்னைப் பார்த்து, 'உன் வலது காது பம்பாய்க்கு மேலே இருக்கிற கச்ச வளைகுடா! இடது காதுதான் வங்காள விரிகுடா! அம்மா, நீ நேரே முகத்தை வைத்துக் கொண்டு நில்லு. நான் உன் முகவாய்க் கட்டைக்குக் கீழே, இரண்டு அங்குல தூரத்தில் என் கையைத் தாமரைப் பூப்போல் கூப்பிக் கொண்டு முழங்கால் மண்டியிட்டு உட்காருகிறேன். என் கும்பிட்ட கைதான் சிலோன். அதாவது இலங்கை! ஹ...ஹ...ஹ...எல்லாரும் சொல்லுங்கள், 'பாரத மாதாகி ஜே!' என்றான். எல்லாரும் 'கட கட' வென்று சிரிக்க ஆரம்பித்து விட்டனர்!" என்றான்.

அவனுடைய கள்ளங் கபடற்ற தன்மையைக் கண்டு என் கண்களில் நீர் சுரந்தது.

விஷயம் புரிந்தது!

ஒரு பெரிய மனிதர் ஒரு சங்கத்துக்குச் சொற்பொழிவாற்றச் சென்றிருந்தார். அவர் இரண்டு மணி நேரம் ஆங்கிலத்தில் பிரமாதமாகப் பேசினார். கூட்டமும் கவனமாய் அவர் பிரசங்கத்தைக் கேட்டது. ஆனால் பிரசங்கியின் முகத்தில் ஏமாற்றமும் அதிருப்தியும் காணப்பட்டன. காரணம், அவருடைய பிரசங்கத்தைக் கேட்ட சபையோர் கரகோஷம் செய்து அவரை உற்சாகப்படுத்தாததுதான்.

அந்தப் பெரிய மனிதர் பேசி முடித்ததும், ஓர் ஆந்திரப் பிரமுகர் எழுந்து பேசினார். அவர் பேசி முடிக்கும் வரையில் சபையோர் அடுத்தடுத்துக் கரகோஷ ஆரவாரம் செய்தனர்.

முதலில் பேசிய பெரிய மனிதர் தம் பக்கத்தில் அமர்ந்திருந்த ஓர் ஆந்திரரைப் பார்த்து, "சபையோருக்கு அவ்வளவு உற்சாகம் உண்டாகும்படியாக அவர் என்ன பேசினார்?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட அந்த ஆந்திரரின் முகத்தில் ஆச்சரியக் குறி தோன்றியது. "தாங்கள் ஆங்கிலத்தில் என்ன பேசினீர்களோ, அதையே அவர் தெலுங்கில் பேசினார். அவ்வளவுதான்!" என்றார்.

"ஏன் அம்மா, அவர்கள் வேறு ஏதாவது பேசுகிறார்களா? சண்டை கிண்டை, துப்பாக்கி, கத்தி கித்தி......" என்று நான் கேட்டேன்.

"அவர்கள் என்னவெல்லாமோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்! கால் காசுக்குப் பிரயோஜனமில்லாத பேச்சு! சின்னஞ் சிறு குழந்தைகள்தானே! ஏதோ உளறிக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். அன்றைக்கு ஒரு நாள் 'அவர்கள் என்னதான் பேசுகிறார்கள் பார்ப்போமே!' என்று எண்ணி நான் ஒளிந்துகொண்டு ஒட்டுக் கேட்டேன். சர்க்கார் குழந்தைகளையெல்லாம் பிடித்துக் கொண்டு போய் விடுகிறார்களாமே! அது நிசமோ, பொய்யோ எனக்குத் தெரியாது. அன்றைக்கு அதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். பொழுது போக வேண்டுமோ, இல்லையோ? போலீஸ்காரர்கள் பெரிய வீட்டுக் குழந்தைகளையெல்லாம்கூடச் சந்தேகத்தின் பேரில் பிடித்துக் கொண்டுபோய் அடிக்கிறார்களாம்; உதைக்கிறார்களாம். 'இந்தப் போலீஸ்காரப் பயல்கள் செய்வது அநியாயம், அக்கிரமம்! இந்த அக்கிரமமான ஆட்சி முறையை நாம் ஒழித்துக் கட்டத்தான் வேண்டும். மனிதன் மனிதனுக்குப் பயந்து சாவதா? மக்கள் தங்களுடைய உடலைக் காப்பதற்காகத் தங்கள் ஆத்மாவையே அல்லவா கெடுத்துக் கொள்ளு

இருக்கிறார்கள்? அடிமைத் தளை நீங்கினால்தான் நமக்கு விமோசனம் உண்டு!" என்றெல்லாம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். படிக்கப் படிக்கப் பேச்சு இன்னும் அதிகமாகிறது. என்ன இருந்தாலும் அவர்கள் குழந்தைகள்தானே!" என்றான் அவன்.

"இம்மாதிரி யெல்லாம் பேச விடக் கூடாது, அம்மா!" என்றேன் நான் பெருமூச்சுடன்.

4

அதற்குப் பிறகு நாலைந்து நாட்கள் ஏதோ அலுவலாக நான் அயலூருக்குப் போய்விட்டேன்.

திரும்பி வந்ததும், என் மனைவி வருத்தம் தோய்ந்த முகத்துடன் என் அருகில் வந்து, "கேள்விப்பட்டீர்களா?" என்று கேட்டாள்.

"என்ன? ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டேன்.

"நீங்கள் பயந்தபடியேதான் ஆயிற்று. நேற்று ஒரு பெரிய போலீஸ் கூட்டம் வந்து ராமய்யாவின் வீட்டைச் சோதனை போட்டது. ராமய்யாவும் அவனுடைய பத்துப் பதினைந்து தோழர்களும் பிடிபட்டு விட்டார்கள். ஒவ்வொருவருடைய வீட்டையும் சோதனை போட்டதில் என்னென்னவோ பயங்கரமான வஸ்துக்கள் எல்லாம் கிடைத்தனவாம்!"

"ராமய்யாவின் வீட்டில் ஏதாவது இருந்ததோ?"

"அவன் வீட்டிலும் இரண்டு ரிவால்வர், வெடி மருந்துகள், கடிதங்கள் எல்லாம் கிடைத்தனவாம். அவர்கள் மீது கொலை, சூழ்ச்சி, அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சதி முதலிய குற்றங்கள் சுமத்தப்பட்டிருக்கின்றனவாம்."

நான் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, "அந்தக் கிழவி இனி செத்தாள்! ஆமாம், அவள் இங்கே இருக்கிறாளா?" என்று கேட்டேன்.

"இருக்கிறாள். நான் அவளைக் கூப்பிட்டு அனுப்பினேன். ஆனால், அவள் வரவே யில்லை. 'குழந்தைகளுக்காகச் சமைத்துக் கொண்டிருக்கிறேன். சிறை அதிகாரிகள் குழந்தைகளைப் பசியோடு கொன்று போட்டு விடுவார்கள். நான் அவர்களுக்கு ஆகாரம் கொண்டு போக வேண்டும்!' என்று சொல்லி விட்டாள்!"

"பாவம், பைத்தியம் பிடித்துவிடப் போகிறது, அவளுக்கு!" என்று சொல்லி விட்டு, நான் வருத்தத்துடன் நாற்காலியில் சாய்ந்தேன்.

* * *

ஒரு வருஷத்துக்கு மேலாக அந்தச் சதி வழக்கு நடந்தது. ஸி. ஐ. டி.காரர்களும் சர்க்கார் வக்கீல்களும் அந்தப் பையன்களின்மீது பெரிய பெரிய குற்றங்களைச் சுமத்தினார்கள். அவர்கள் எங்கெங்கெல்லாமோ 'அண்டர் கிரௌண்ட்' வேலை செய்திருப்பதாகவும், தங்கள் செலவுக்காகவும் பிரசாரத்துக்காகவும் சர்க்கார் அதிகாரிகளின் வீடுகளைக் கொள்ளையிட்டு, ஆயுதங்கள், பணம் முதலியவைகளைச் சேர்த்துக் கொண்டதாகவும், ராணுவத்தில் கூடக் கலக விதை விதைத்ததாகவும் குற்றங்கள் சுமத்தினார்கள்.

சர்க்காரிடம் உள்ள பயம் காரணமாக எந்த வக்கீலும் அவர்களுடைய கட்சியை எடுத்துப் பேசத் தயாராயில்லை. 'இருப்பதும் ஒன்றுதான்; இல்லாமல் இருப்பதும் ஒன்றுதான்' என்று சொல்லக்கூடிய ஒரு வக்கீல் கிடைத்தான்.

அந்தப் பையன்களின் கட்சியை எடுத்துப் பேசுவதற்குக் கிழவிதான் மிகத் துடியாய்த் துடிப்பாள். காலையிலும் மாலையிலும் அவள் பாத்திரத்தை விற்றோ, நகைகளை விற்றோ சமைத்து அவர்களுக்கு ஆகாரம் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வருவாள். அதற்குப் பின் வக்கீல்களின் வீட்டுக்குப் போய் "எல்லாம் முழுப் பொய்! எங்கே யிருந்துதான் போலீஸ்காரர்கள் அந்த மாதிரிச் சாமான்களை யெல்லாம் நம் வீட்டில் கொண்டுவந்து போட்டார்களோ, புரியவே யில்லை. அந்தப் பையன்கள் எல்லாரும் வாய்ப் பேச்சுப் பேசுவார்களே தவிர, ஒரு குற்றமும் செய்யாதவர்கள். நான் கடவுள் மேல் ஆணை வைத்துக்கூடச் சொல்லத் தயார்! வக்கீல் ஐயா, நீங்கள் ஜெயிலுக்கு ஒரு தடவை வந்து அந்தக் குழந்தைகளைப் பாருங்கள். பூவைப் போன்ற அந்தக் குழந்தைகள் கொலை செய்வார்களா?" என்பாள்.

அவள் உடல் மெலிந்து விட்டது. இடுப்பில் கூனல் விழுந்து விட்டது. கண்கள் ஒளியிழந்து விட்டன. ஆனாலும் அவள் அந்தக் குழந்தைகளுக்காக ஓடியாடி வேலை செய்வதை நிறுத்தவே யில்லை.

சிற்சில சமயம் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், வார்டர்கள் எல்லாரும் அவள்மேல்

எரிந்து விழுந்து, அவனை வெளியே விரட்டு வார்கள். அப்பொழுது அவன் தடியை ஊன்றிக்கொண்டு நிமிர்ந்து நின்று, "நீயும் ஒரு மனிதன் மாதிரி! நான் அந்தச் சின்னக் குழந்தைகளுக்காக இத்தனை பாடு படு கிறேன். நீ என்னடா வென்றால் என்னை அடித்து விரட்டுகிறாயே! உங்களுக்கெல் லாம் நான் என்ன கெடுதல் செய்தேன், அப்பா!" என்பான்.

'இவை யெல்லாம் போலீஸ்காரர்களின் அட்டூழியங்கள். சர்க்கார் கையில் இவ்விஷ யங்கள் போனபின் அந்தக் குழந்தை களுக்கு நியாயம் கிடைத்துவிடும். அவர்கள் குற்ற மற்றவர்களாக விடுதலை யடைந்து விடுவார்கள். அப்புறம் ராமய்யாவுடன் வீட்டுக்கு வருவார்கள்; பழைய படி கொட்டம் அடிப்பார்கள்; தன்னை அம்மா வென்று அழைப்பார்கள்' என்பது அவ னுடைய எண்ணம்.

ஆனால் அந்தக் குழந்தைகளில் நால்வ ருக்கு மரண தண்டனையும், மற்றவர் களுக்கு ஏழு வருஷக் கடுங்காவல் தண்ட னையும் நியாய ஸ்தலத்தில் விதிக்கப்பட் டிருக்கிறது என்ற விஷயம் தெரிந்ததும் அவன் அடைந்த ஏமாற்றத்துக்கு ஓர் அளவே யில்லை.

அவன் கோர்ட்டுக்கு வெளியே கூனிக் குறுகிக் கொண்டு நின்றான். பையன்கள் விலங்குகள் ஒலிக்க, ஆடி அசைந்து கொண்டு வெளியே வந்தார்கள். முதன் முதலில் சிரிக்கச் சிரிக்கப் பேசும் அந்தப் பையன்மீது அவனுடைய பார்வை விழுந்தது.

"அம்மா, நீ எங்களுக்குப் பக்ஷணம் செய்து கொடுத்துக் கொடுத்து எங்களை ஒரே பருமனாக்கி விட்டாய்! தூக்குக் கயிறு கூட அறுந்து விழுந்து விடும்போலிருக் கிறது!" என்றான் அவன்.

"அம்மா, நீயும் நாங்கள் போகும் இடத் துக்குச் சீக்கிரம் வந்துவிடு. இங்கேயிருந்து கொஞ்ச தூரம்தான் அம்மா! ஒரே மூச்சில் வந்து விடலாம். அங்கே நாம் சுதந்திர மாகச் சந்திக்கலாம்!" என்றான் ராமய்யா.


பிறகு, "வருகிறாயா, அம்மா?"—"வரு கிறாயா, அம்மா?" என்று தண்டனை அடைந்த பையன்கள் எல்லாருமே அந்தக் கிழவியைச் சூழ்ந்துகொண்டு கேட்டார்கள்.

அவன், 'நீங்கள் எங்கே போகப் போகி றீர்கள், பித்துக் குளிகளா!' என்று கேட்பவன் போல, அந்தக் குழந்தைகளையே உற்றுப் பார்க்கலானான்!

5

ஒரு நாள் இரவு சாப்பாடு முடிந்தபின் மாஜினியின் புஸ்தகமொன்றை எடுத்து வைத்துக் கொண்டு நான் படிக்க உட்கார்ந் தேன். அந்தப் புத்தகத்தின் முதல் பக்கத் தில் ஏதோ பென்சிலால் எழுதப் பட்டிருப் பதைக் கண்டு நான் திடுக்கிட்டேன். அது ராமய்யாவின் கையெழுத்து என்று பார்த்த வுடனேயே விளங்கி விட்டது. அவன் மூன்று வருஷங்களுக்கு முன்பு அந்தப் புஸ்தகத்தை என்னிடமிருந்து வாங்கிப் படித்தான் என்பதும் நினைவுக்கு வந்தது.

ஒரு கணம் அந்தப் பையன்மீது எனக்கு அனுதாபம் ஏற்பட்டது. ஆனால் அடுத்த கணமே போலீஸ் அதிகாரியின் நினைவு வந்தது. அவனுடைய பயங்கரமான பூனைக் கண்கள் 'ஜாக்கிரதை!' என்று எச்சரிப் பதுபோல என் மனக் கண் முன் காட்சி அளித்தன. அவ்வளவுதான். நான் மேஜையிலிருந்த ரப்பரை எடுத்து ராமய்யா வின் எழுத்தை அழிக்க ஆரம்பித்தேன்.



குழந்தை:—அப்பா, நம்ம நாய்க் குட்டி ரொம்ப பொல்லாத்தனம் செய்கிறது! என் விளையாட்டுப் பொம்மையின் பூட்டை அது கடித் துத் தின்று விட்டது!

அப்பா:—அப்படியானால் நான் அதற்குத் தகுந்த தண்டனை கொடுக்கிறேன்!

குழந்தை:—வேண்டாம், அப்பா! நானே அதற்குத் தகுந்த தண்டனை கொடுத்து விட்டேன்!

அப்பா (ஆச்சரியத்துடன்):— நீ என்ன தண்டனை கொடுத்தாய்?

குழந்தை:—நாய்க் குட்டிக்கு வைத் திருந்த பாலை நான் சாப்பிட்டு விட்டேன்!

அதே சமயம் என் மனைவியுடன் ராமய்யாவின் தாயார் உள்ளே நுழைந்தாள். அவள் கையில் ஒரு கடிதம் இருந்தது.

நான் மனதை அடக்க முடியாமல், "ஜானகியம்மாவா! உடம்பு என்ன இப்படியாகி விட்டது? கையில் என்ன அது?" என்று கேட்டேன்.

அவள் பேசாமல் அந்தக் கடிதத்தை என் கையில் கொடுத்தாள். அதில் சிறையின் முத்திரை இருந்தது. நான் வியாகுலத்துடன் அதை இரைந்து படித்தேன்:—

"அம்மா,

இந்தக் கடிதம் உனக்குக் கிடைக்கும் அன்று காலையிலேயே, நான் காலை இளஞ் சூரியனின் ரதத்தில் அமர்ந்து அந்த ஊருக்குப் புறப்பட்டு விடுவேன். நான் நினைத்திருந்தால் உன்னைக் கடைசி காலத்தில் ஒரு முறை சந்தித்திருக்கலாம். ஆனால் அதனால் என்ன பயன்? நீ என்னை ஈன்றெடுத்த தாய். நான் உன்னை விட்டு எங்கே ஓடிப் போக முடியும்? அம்மா, இந்த உலகத்தில் காற்று உள்ள வரையில், சூரியன் பிரகாசிக்கும் வரையில், கடலில் அலை மோதும் வரையில், உனது கருணையே உருவெடுத்த மடியிலிருந்து என்னை யாரால் பிரிக்க முடியும்?

கதிரவன் காத்திருப்பான்; அருணன் ரதத்தை நிறுத்திக்கொண்டு உன்னை எதிர்பார்ப்பான்; சிரிக்கச் சிரிக்கப் பேசுவானே அவன், நான், மற்ற பையன்கள் எல்லாரும் உன் வரவை சுதந்திரக் கோயிலில் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்.

நாம் சேர்ந்தே இருந்தோம்; இனியும் சேர்ந்தே இருப்போம். இது நிச்சயம், அம்மா!

இப்படிக்கு,
உன் அருமைப் பிள்ளை,
ராமய்யா."

கடிதத்தைப் படித்த பின் நடுங்கும் கைகளுடன் நான் அதைக் கவருக்குள் போட்டேன். என் மனைவி விசித்து விசித்து அழ ஆரம்பித்து விட்டாள். ஆனால், ஜானகியம்மாள் தடியை ஊன்றிக் கொண்டு எவ்வித உணர்ச்சியும் இல்லாத கண்களுடன் என்னையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அவளுக்கு, தான் எங்கேயிருக்கிறோம் என்ற உணர்ச்சியேயில்லை.

சிறிது நேரம் கழித்து அவள் மௌனமாகவே கையை நீட்டி அந்தக் கடிதத்தைக் கேட்டாள். பிறகு தடியை ஊன்றிக் கொண்டு ஒன்றும் பேசாமலேயே வெளியே போய் விட்டாள்.

நான் ஒன்றும் புரியாமல் நாற்காலியில் தொப்பென்று விழுந்தேன். எனக்குத் தலை சுழன்றது. உடனே மாஜினியின் புஸ்தகத்தின் மீது என் பார்வை விழுந்தது. அதன்மீது ரப்பரும் இருந்தது. அதற்குப் பிறகு என்னுடைய சுகம், நிலபுலன்கள், பணக்கார வாழ்க்கை, அந்தப் போலீஸ் அதிகாரியின் பூனைக் கண்கள் ஆகியவற்றின் நினைவுகள் ஒவ்வொன்றாக எழுந்து மறைந்தன. மீண்டும் அந்தப் பயல் எழுதியிருந்த எழுத்தை ரப்பரைக் கொண்டு அழிக்க முற்பட்டேன்.

"அம்மா......!" என்று குரல் எங்கிருந்தோ வந்தது. ரப்பரும் கையுமாகவே, நடுநடுங்கிய உள்ளத்துடன் ஜன்னல் வழியாக வாசற்புறத்தை எட்டிப் பார்த்தேன். எங்கே பார்த்தாலும் ஒரே கும்மிருட்டாக இருந்தது. "வெறும் பிரமை!" என்று எண்ணிக் கொண்டேன்.

மறுபடியும் அதே "அம்மா!" என்ற குரல் வந்தது. ஜானகியம்மாள் தான் அழுது கொண்டிருக்க வேண்டும்! தாய் உள்ளம் படாத பாடு படாதா?

இருட்டு சற்று விலகியது. உஷாதேவி தன் சிவப்புச் சேலையை உலர்த்தினாள். சிறிது நேரத்துக்கெல்லாம் அருணன் தன் ரதத்தை ஓட்டிக் கொண்டு தொடுவானத்துக்கு அப்பாலிருந்து வேகமாக வெளியே வந்து நின்றான். எனக்கு ராமய்யாவின் கடிதம் நினைவு வந்தது.

"அம்மா!" என்று ராமய்யாவேதான் கூப்பிட்டிருப்பானோ! ஜானகி அதற்குப் பதில் கொடுக்கும் முறையில் "அம்மா!" என்று முனகி யிருப்பாளோ?

என் மனம் 'படபட' வென்று அடித்துக் கொண்டது. நான் வேலைக்காரனைக் கூப்பிட்டு, "ராமய்யாவின் தாயார் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று பார்த்துவிட்டு வா!" என்றேன்.

அவன் திரும்பி வந்தபொழுது, நான் மேஜைக்கும் மாஜினிக்கும் எதிரே நின்று கொண்டிருந்தேன், கையில் ரப்பரை எடுத்துக் கொண்டு, அந்த எழுத்தை அழிக்கும் நோக்கத்துடன்.

அவன் நடுங்கும் குரலில், "எசமான்! அந்த அம்மாளின் நிலைமை ரொம்ப மோசமாயிருக்கிறது. வீடு பூட்டியிருக்கிறது. அந்த அம்மாள் திண்ணையில் காலை நீட்டிக் கொண்டு, கையில் ஒரு கடிதத்துடன் கிடக்கிறாள். வாய் திறந்திருக்கிறது. கண்களும் விழித்தது விழித்தபடியே இருக்கின்றன. மூச்சுக்கூட நின்றுவிட்டது போலத் தோன்றுகிறது!" என்றான்.

(ஹிந்திக் கதை யொன்றைத் தழுவியது)


சிக்கல் மயமான உலகில் உண்மை வாய்ந்தவை எளிதான விஷயங்களே
ஒரு சிறு வில்லை உங்களுக்கு ஆரோக்கியம் அளிக்கமுடியும்
அது இயற்கைக்கு மாறாக அன்றி அதனுடன் ஒத்துவேலை செய்கிறது
ஆஸ்ப்ரோவால் இருதயத்துக்கு ஒரு கெடுதியுமில்லை
'ஆஸ்ப்ரோ'
வலியையும் ஜுரத்தையும் போக்கடிக்கிறது
ஆடவர், ஸ்திரீகள், குழந்தைகள், அனைவருக்கும் ஆஸ்ப்ரோ செய்யக்கூடியதென்ன
ASPRO
எங்கும் கிடைக்கும்

படித்துப் பார்!

ஆகஸ்டு மாதம் 30-ந் தேதி ராணிப் பேட்டையில் பாரதியார் மண்டப நிதிக்கு அந்த ஊர்த் தமிழன்பர்கள் அளித்த ரூபாய் இரண்டாயிரத்துச் சொச்சத்தை வாங்கிக் கொண்டு இரவு ஒன்றரை மணிக்குத் திரும்பி வந்தேன். வந்ததும் மேஜைமேல் இருந்த "நினைவு அலைகள்" என்னும் பைண்டு பூர்த்தியாகாத புத்தகம் கண்ணில் பட்டது.

புத்தகத்தைப் பிரித்து "முதல் பள்ளிக் கூடம்" என்னும் முதற் கட்டுரையைப் படிக்க ஆரம்பித்தேன்.

* * *

"இது என்ன? ராத்திரி ஒன்றரை மணிக்கு வந்து, படிக்க ஆரம்பித்து விட்டீர்களே? பொழுது விடிந்தால் ஆவணி அவிட்டம்! ராத்திரி சிறிது நேரமாவது தூங்கவேண்டாமா?"

"தூங்குவதற்காகத்தான் படிக்கிறேன். நேரந் தப்பிவிட்ட படியால் படுத்தால் தூக்கம் வராது; பதினைந்து நிமிஷம் படித்தால் ஒரு வேளை தூக்கம் வரும்."

"அழகாய்த்தான் இருக்கிறது."

* * *

முதலாவது கட்டுரையில் வர்ணித்திருந்த தேர் மூட்டிப் பள்ளிக்கூடம் அழகாய்த்தான் இருந்தது! சாயர் வாத்தியாரைத் தேடிப் பிடித்து, அவரிடமிருந்து பிரம்பைப் பிடுங்கி, குழந்தை சௌந்தர ராஜனை அடித்த கையில் பத்து அடி வெளுத்து விட்டு வரவேண்டும் என்று தோன்றியது.

அடுத்தாற்போல், பெரிய பள்ளிக்கூடம் என்னும் இரண்டாவது கட்டுரையைப் படித்ததும் கோபம் இன்னும் அதிகமாயிற்று. நெற்றியில் வடகலை நாமத்தைப் போட்டுக் கொண்டு நல்ல வாட்ட சாட்டமாகப் பருத்து உருண்டு இளந் தொந்தியுடன் விளங்கிய ஐயங்கார் வாத்தியாரை, அவருடைய ரூல் தடியைப் பிடுங்கி மணிக்கட்டில் இருபது அடி அடித்துவிட்டு வரவேண்டும் என்று ஆத்திரம் பொங்



கிக்கொண்டு வந்தது. சின்னஞ் சிறு குழந்தை சௌந்தர ராஜனின் மணிக்கட்டில் ரூல் தடியால் அடித்த பாதகனை என்ன செய்தால்தான் என்ன?

* * *

"மணி இரண்டு அடித்து விட்டதே? இன்னும் படுத்துக்கொள்ள வில்லையா?"

"தூக்கம் வரவில்லை; வந்ததும் படுத்துக் கொள்கிறேன்."

"அழகாய்த்தான் இருக்கிறது!"

* * *

பாண் வர்ணப் பட்டாணிக் கடலையின் வர்ணனை மிகவும் அழகாய்த்தான் இருந்தது. பச்சைப் பட்டாணிக் கடலையைச் சட்டியில் போட்டு வறுக்கும்போது ஏற்படும் அபூர்வமான மணம் மூக்கிலே வந்து தாக்கிற்று. பாவம்! பட்டாணிக் கடலைக்கு அவ்வளவு ஆசைப்படும் பிள்ளையின் கையில் அந்தப் பட்டாணிக்காரன் ஒரு பிடி பட்டாணிக் கடலை கொடுத்தால் என்ன? அவனுக்கு என்ன குறைந்து போய் விடும்? ஒன்றுக்குப் பத்தாகப் பெருகாதா? தரித்திரம் பிடித்தவன்!

அடாடா! திருவிழாவில் அதிருஷ்டச் சீட்டுப் போட்ட அந்தச் சாயபு நன்றாயிருக்க வேண்டும்! அவன் எத்தனை பேரைப் பிளாங்குச் சீட்டினால் மோசம் செய்தாலும் செய்யட்டும்! பாலன் சௌந்தராஜனுக்குப் பட்டாணிக்கடலை வாங்கத் துட்டுக் கொடுத்தானல்லவா? வாழ்க! அவன் குலம் வாழ்க!

பிறகு அந்தப் பெரியம்மாள்! சௌந்தர ராஜனை அன்போடும் அருமையோடும் வளர்த்த பெரியம்மாள்! வீட்டிலே எல்லோரும் வைது திட்டிக் குழந்தையை இம்சித்துக் கொண்டிருந்த காலத்தில், கதை சொல்லியும், கோயிலுக்கு அழைத்துச் சென்றும், கோயிலில் சித்திரங்களைக் காட்டி விளக்கியும், புராணப் படனங்களுக்கு அழைத்துச் சென்றும், பட்சணங்கள் செய்துகொடுத்தும் சௌந்தர ராஜனைப் பரிவுடன் வளர்த்த

நினைவு அலைகள்: ஆசிரியர்: ஸ்ரீ டி. எஸ். எஸ். ராஜன்; பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை; விலை: ரூபா 6—0—0.

அந்தப் புண்ணியவதி! வைகுண்டம் என்பதாக ஒன்றிருந்தால், அந்த அம்மாள் அங்கே பகவானுடைய சந்நிதியில் என்றென்றைக்கும் சேவை செய்து பேரானந்தத்தில் மூழ்கி இருக்கட்டும்!



* * *

"இது என்ன கூத்து? மணி இரண்டரை ஆகிறதே? இன்னுமா படித்துக்கொண்டிருக்கிறீர்கள்? அது என்ன அப்படிப்பட்ட அதிசயமானபுத்தகம்?"

"அதிசயமான புத்தகந்தான். இதைப் படித்தால் தூக்கம் வரும் என்று நினைத்தேன். அது தவறு. வரக்கூடிய தூக்கமும் போயே போய்விட்டது!"

"அதுதான் அப்போதே சொன்னேன்; கேட்டால்தானே? என்ன புத்தகம்? ஏதாவது பயங்கரத் துப்பறியும் நாவலோ?"

"நாவலும் இல்லை; வேறும் இல்லை. டாக்டர் ராஜன் எழுதிய புத்தகம். அவருடைய சொந்தக் கதை. நாவலையும் வேலையும் விட அதிக சுவாரசியமாக இருக்கிறது."

"டாக்டர் ராஜன் புத்தகமா? அப்படியானால் இன்றைக்கு எங்கே தூங்கப் போகிறீர்கள்? விடிய விடியச் சிவராத்திரிதான்!"

* * *

ஸ்ரீ சௌந்தர ராஜன் வைத்தியக் கல்லூரியில் உதவிச்சம்பளம் பெற்றுப் படித்துத் தேறி டாக்டர் ராஜன் ஆனார். மனைவியையும் அழைத்துக் கொண்டு சர்க்கார் கடனைக் கழிக்கப் பர்மாவுக்குச் சென்றார். நானும் அவருடன் கூடச் சென்றேன். அங்கே சர்க்கார் ஆஸ்பத்திரியில் எத்தனையோ கஷ்டங்களை அவர் அநுபவித்தார். நானும்கூட அநுபவித்தேன். மேலதிகாரியின்மேல் கண்ணாடிக் குவளையையும் தர்மாமீட்டரையும் வீசி எறிந்தார். நானும் பக்கத்திலிருந்த கண்ணாடி 'வெயிட்'டைத் தூக்கி எறிந்தேன். பிறகு டாக்டர் ராஜன் கூடச் சென்று நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுக்கு அவர் வைத்தியம் செய்ததைப் பார்த்துக் கொண்டிருந்தேன். சீமைக்குப் போய்ப் பெரிய வைத்தியப் பட்டத்துடன் திரும்பி வருவதென்று தீர்மானித்தார். அவர் கப்பலில் ஏறினபோது நானும் டிக்கெட் இல்லாமல் ஏறி விட்டேன்.

இப்படியாக டாக்டர் ராஜனுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளையெல்லாம் நானும் கூட இருந்து அநுபவித்தேன். டாக்டர் ராஜன் மந்திரியாகும் வரையில் அதாவது 335 பக்கங்கள் படித்து விட்டேன். அது வரையில் மணி பார்க்கவில்லை. கடிகாரம் டாண், டாண் என்று ஐந்து மணி அடித்தது. புத்தகத்தை எடுத்து மூடிவைத்தேன்.

ஆனால் இனிமேல் தூக்கம் எங்கே? இதோ பால்காரன் பசு மாட்டுடன் வரும் சத்தம் கேட்கிறது. பத்து நிமிஷத்துக்கெல்லாம் காப்பி வந்துவிடும். காப்பியைச் சாப்பிட்டு விட்டு இந்த அருமையான புத்தகத்துக்கு முன்னுரை எழுத வேண்டியதுதான்.


புத்தகம் என்றால் இதுவல்லவா புத்தகம்! சுயசரிதம் என்றால் இதுவல்லவா சுயசரிதம்! எழுதியவரின் உள்ளத்தோடு நம்முடைய உள்ளம் ஒட்டி ஒன்றுபட்டு விடுகிறதே! அவருடைய கோபதாபங்கள் நமக்கும் உண்டாகின்றனவே! அவருடைய தியாக உணர்ச்சியும் பொதுத் தொண்டில் ஆர்வமும் நம்மையும் பற்றிக்கொள்கின்றனவே! அவர் தமது குற்றங்களை எடுத்துச் சொல்லும்போது நமக்குக் கொஞ்சமும் அருவருப்பு உண்டாகாமல் அநுதாபம் உண்டாகிறதே! அவர் கஷ்டப்படும்போது நாமும் கஷ்டப்படுகிறோமே! அவர் கண்ணீர் விடும்போது நாமும் கண்ணீர் விடுகிறோமே!

* * *

சமூகமும் அரசியலும் சேர்ந்து ஏற்படுத்திய விலங்குகளை எல்லாம் தகர்த்தெறிந்து பூரண விடுதலை பெறுவதற்கு ஓர் உயர்ந்த ஆத்மா நடத்திய தீரப் போராட்டங்களை இந்தப் புத்தகம் நமக்கு உள்ளது உள்ளபடி தெரியப்படுத்துகிறது.

இந்த அருமையான புத்தகத்தை வெளியிடும் பாக்கியத்தைப் பெற்ற கலைமகள் காரியாலயத்தை வாழ்த்துகிறேன்.

[மேற்படி புத்தகத்துக்கு "கல்கி" ஆசிரியர் எழுதிய முகவுரையின் ஒரு பகுதி.]



*ஜயஸ்ரீ: மங்கையர்க்கரசி
நிர்மலமான முகமண்டலம்..

என்னே* அவளது எழில்! அவள் பாண்ட்ஸ் உபயோகிக்கிறாள்!

... நீங்களும் பாண்ட்ஸ் உபயோகித்து உங்கள் வதனத்தை புதுமலர் காந்தி பொங்க விளங்கச் செய்து வருகிறீர்களா? எவ்விலையிலுமுள்ள வேறெந்த முக க்ரீம்களையும் விட பாண்ட்ஸையே எழில் படைத்தவர்கள், பிரமுகர்கள் அதிகமாக உபயோகிக்கின்றனர். உங்கள் சருமத்திற்கு உங்களால் முடியும் மிக முக்கியமான பராமரிப்பு அதை செம்மையாகச் சுத்தம் செய்வதேயென்பது ஞாபகமிருக்கட்டும். இன்றையிலிருந்தே பாண்ட்ஸ் உபயோகிக்கத் தொடங்குங்கள்.

பாண்ட்ஸ் இரைசிமுறை



பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்: தினம் இரண்டுவேளை விரல் நுனிகளால் கோல்ட் க்ரீம் மெதுவாகத் தடவி, முகத்தை செம்மையாகச் சுத்தம் செய்யுங்கள். பாண்ட்ஸ் பஞ்சு வால் துடைத்துக் களையவும்.



பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்: பின்பு வானிஷிங் க்ரீம் தடவுங்கள். அது சருமத்திலுள்ள மறைத்து-சருமத்திற்கு பாதுகாப்பு அளிக்கிறது.



பாண்ட்ஸ் பௌடர்: பின்னர் வேண்டுமானால் கொஞ்சம் பௌடரும் தடவிக் கொள்ளுங்கள். முகம் புதுமலர்போன்று மோகன காந்தியுடன் விளங்கும்.

பாண்ட்ஸ் க்ரீம்ஸ்

வியாபார விவரங்களுக்கு: எல. டி. வெய்மூர் & கோ. (இந்தியா) லிட்.
பம்பாய் - கல்கத்தா - கராச்சி - சென்னை.

சிவப்பு நாடா

கே. வி.

உத்தியோகஸ்தர்களது பரிபாஷையில் "சிவப்பு நாடா" என்பதற்கு "அரசாங்க இயந்திரம்" என்று பொருள். அதன் சர்வ வல்லமையைப் பற்றி நம் தாய் நாட்டின் முதல் அமைச்சர் பண்டித ஜவாஹர்லால் நேரு முதல், தாலூகா ஆபீஸ் பணியாள் சின்னப்பன் வரையில் உள்ள அத்தனை ஆயிரம் பேரும் நன்கு அறிவார்கள். யமன் தன் ஆட்சியை வெற்றி பெற நடத்துவதற்காகத் தன் கையில் வைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் பாசக் கயிற்றை விட, ஒரு முழ நீளமுள்ள இச் சிவப்பு நாடா சக்தி படைத்தது.

எந்த உத்தியோக சாலையிலாவது போய்ப் பாருங்கள்! குமாஸ்தாக்கள் மேஜை மீதும் அதிகாரிகள் மேஜை மீதுமுள்ள தகரப் பெட்டிகளிலும், சிவப்பு நாடாவினால் சுற்றப்பட்ட நீளமும் குட்டையுமான காகிதங்கள் கோக்கப்பட்ட, "சாதாரணம்" (Ordinary) "அவசரம்" (Urgent) வெகு அவசரம் (Very emergent) என்ற சொற்கள் அச்சியற்றப்பட்ட பல அட்டைகள் காட்சி அளிக்கும். அந்த அட்டைகளைச் சுற்றியுள்ள சிவப்பு நாடாதான் இங்கு குறிக்கப்படுகிறது.


"சிவப்பு நாடா" என்ற இந்தச் சொற்றொடருக்குச் சமயோசிதமாகச் சொல்லக்கூடிய பொருளும் கூட உண்டு. அது என்னவென்றால், "சகிக்க முடியாத தாமதம்" என்பதேயாகும். இந்தத் தாமதத்துக்குக் காரணம், உத்தியோக சாலையை நாடி வரும் ஒவ்வொரு காகிதத்தின் மீதும், அதைப் படிக்கும் அத்தனை குமாஸ்தாக்களும், அதிகாரிகளும் அந்தக் காகிதத்தில் கண்டுள்ள விஷய சம்பந்தமாகத் தங்கள் அபிப்பிராயத்தைச் சட்ட ஆதாரத்துடன் எழுத்து வடிவில் பொறித்து வைக்க எடுத்துக் கொள்ளும் யோசனைக் காலமேயாகும்.

ஏதேனும் ஒன்றைக் குறித்து விண்ணப்பம் போட்டவன், ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு பதிலை எதிர்பார்க்க உரிமைப் பட்டிருக்கிறான். ஆனால் அவன் எதிர்பார்க்கும் காலத்துக்குள் அரசாங்க இயந்திரம் அவ்வளவு வேகமாக இயங்கக் கூடியதா, என்ன? அந்த விண்ணப்பம் எத்தனை இடங்களில் தூங்க வேண்டும்? எத்தனை தகரப் பெட்டிகளில் இளைப்பாற வேண்டும்? எத்தனை பேர்களது கைகளில் ஏற வேண்டும்? மாற வேண்டும்? கண்ணில் பட வேண்டும்? கருத்தில் ஊன்ற வேண்டும்? ஊர் ஊராகச் சஞ்சாரம் செய்ய வேண்டும்? இதற்குள் விண்ணப்பதாரி பதிலை எதிர்பார்த்து எதிர்பார்த்து, ஏமாந்து ஏமாந்து உள்ளம் உடைந்தே போவான். இறுதியாகக் "கவனிக்கப்பட்டு வருகின்றது" என்றோ, "கவனிக்கப்பட மாட்டாது" என்றோ பதில் வரும்.

நீண்ட காலம் வேலை செய்து அரசாங்க இயந்திரத்துடன் ஐக்கியப்பட்டு விட்ட ஓர் அதிகாரிக்குச் சிவப்பு நாடா பந்தத்திலிருந்து விலகுவதை விட உயிரை விடுவது எளிதாயிருக்கும். 'முகத்தைச் சுற்றி மூக்கைப் பிடிக்க முயற்சிப்பதும், அளவு கடந்த தாமதமும்' தான் சிவப்பு நாடாவினால் ஏற்பட்ட கீர்த்தமான பலன்கள். பசியும், சாவும் பயப்படுத்திக் கொண்டிருக்கும் ஆபத்தான நிலையில் கூட உணவுப் பிரச்னை சிவப்பு நாடா பாதையில்தான் நடந்து தீர வேண்டும்.



ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிய தஸ்தாவேஜுகளை ஏழு மணி நேரத்துக்கு மேல் படித்த பிறகும்கூடத் தலையும் காலும் தெரியாமல் வெறுப்படைந்த முன்னாள் இராஜப் பிரதிநிதியாக இருந்த கர்சான் பிரபு, 1899-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் தேதி இந்தியா மந்திரிக்கு எழுதிய கடிதத்தில், 'சிவப்பு நாடாவின்' கொடுமையைப் பற்றி என்ன சொல்லிப் புலம்புகிறார், தெரியுமா? கேளுங்கள்!



"ஆகஸ்டு ஐந்தாம் தேதிய இந்தத் தஸ்தாவேஜுகள் வந்தன. அவை வெளிநாட்டுக் காரியாலத்துக்கு அனுப்பப்பட்டன. 'அ' என்னும் குமாஸ்தா அவற்றைப் பற்றி 41 அச்சுப் பக்கங்களுக்குத் தம் கருத்துக்களை எழுதினார். அவரை விட்டு அவை 'ஆ' என்ற குமாஸ்தாவிடம் சென்றன. அவர் 'அ' எழுதியதற்கு மேல் 21 அச்சுப் பக்கங்கள் அளவு தம் அபிப்பிராயத்தை விரித்து தள்ளியிருந்தார். அதன் பின்னர் உதவிக் காரியதரிசியிடம் சமர்ப்பிக்கப்பட்டன. பிறகு துணைக் காரியதரிசி பார்வைக்குச் சென்றன. இவர்கள் அனைவரும் குமாஸ்தாக்களுக்குச் சளைத்தவர்களா என்ன? ஒவ்வொரு காரியதரிசியும் குமாஸ்தாக்கள் எழுதிய அளவுக்குக் குறையாமல் தம் கருத்துக்களைத் தீட்டிவிட்டிருந்தார்கள். முடிவாக அந்தத் தஸ்தாவேஜுகள் அரசாங்க அணியின் கடைசிப் படிக்கு வந்தன. அங்கு ராணுவ அதிகாரிகள், வைஸிராய் நிர்வாக சபை அங்கத்தினர்கள் ஆகியவர்களால் பார்க்கப்பட்டு, அபிப்பிராயங்கள் புத்தகங்கள் புத்தகங்களாக அச்சடிக்கப்பட்டு, இராஜப் பிரதிநிதியின் பார்வைக்கு வந்துள்ளன. இந்த இலக்கிய அவியலிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்!"

சிவப்பு நாடாவைப் பற்றிக் கர்சான் பிரபுவின் புலம்பலோ, புகழுரையோ இவைதான்.

சிவப்பு நாடாவின் ஆட்சி முறையைப் பற்றி மாண்டேகு பிரபு கூறும் ஒரு ரஸமான கதையைக் கேளுங்கள்.

"பட்டாளத்திலிருந்து அப்பொழுது தான் கப்பலிலிருந்து இறங்கிய ஒருவருக்குக் கரையில் குழந்தை பிறந்தது. அதன் உணவுக்காக உணவுப் பங்கீட்டு அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து கொண்டார் குழந்தையின் தகப்பனார். உணவுச் சட்டப்படி, 'குழந்தை பிறந்த நேரம் எது?' என்று கேட்டு உணவுப் பங்கீட்டு அதிகாரி விண்ணப்பத்தைத் திருப்பி யனுப்பினார். நடுப்பகலுக்குப் பிறகு இரண்டு மணிக்குக் குழந்தை பிறந்ததாகப் பதில் அனுப்பப்பட்டது. 'நடுப்பகலுக்குப் பிறகு கப்பலிலிருந்து இறங்குகிறவர்களுக்கு உணவு கிடையாது. நடுப்பகலுக்கு முன்பு கப்பலிலேயே உணவு வாங்கப்பட்டிருக்க வேண்டும்' என்ற ராணுவச் சட்டப்படி குழந்தைக்கு உணவு தர மறுக்கப்பட்டு விட்டது."

கர்ப்பத்திலிருக்கும் குழந்தைக்கு முன் கூட்டியே உணவு வாங்க வேண்டுமென்பது ராணுவச் சட்டத்தின் கருத்தானால், பகல் பன்னிரண்டு மணிக்கு முன் பிறக்காத குழந்தைக்கு உணவு வாங்குவதும் சட்டப்படி குற்றமில்லையா? எப்படியோ இரு வழிகளிலும் குழந்தைக்கு அன்று உணவு கிடைக்காது போனதுதான் கைகண்ட பலன்.

"மனிதனுக்காகச் சட்டம்" என்ற உண்மை போய், "சட்டத்துக்காக மனிதன்" என்ற கொள்கைதான் சிவப்பு நாடா ராஜ்யத்தில் அனுசரிக்கப்படுகிறதென்பதற்கு இது சரியான எடுத்துக்காட்டல்லவா?

பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவில் வேலை பார்த்து வந்த கிழக்கிந்தியக் கம்பெனி உத்தியோகஸ்தர்கள், இங்கிலாந்தில் இருந்த தங்கள் முதலாளிக்கு இங்கு நடைபெற்று வந்த சிறியதொரு நிகழ்ச்சியைக்கூட விடாமல் விரிவாக எழுதும் பழக்கத்தைக் கொண்டிருந்ததிலிருந்து இந்த வழக்கம் தொடங்கியதென்பது சிலர் கருத்து. இந்தியாவை ஆள இங்கிலாந்தில் அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் போட்டிப் பரீட்சைகளில் மிக விரிவாகவும், ஒருசிறு விஷயத்தையும் அலட்சியமாக விடாமலும், யார் யார் எழுதுகின்றார்களோ அவர்களையே நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கும் வழக்கம் புகுந்த காலத்தில், சிவப்பு

நாடா ஜனனம் செய்ததாக வேறு சிலர் நினைக்கிறார்கள். 1858-ஆம் ஆண்டில் இந்தியாவில் ஏற்பட்ட சிப்பாய்க் கலகம் தான் சிவப்பு நாடாவைத் தோற்றுவித்தது என்று மற்றும் சிலர் நினைக்கிறார்கள். கிழக்கிந்திய ஊழியர்களின் திறமைக் குறைவே கலகத்துக்குக் காரணமாயிருந்த தென்றும், அப்படிப்பட்ட கலகம் மட்டும் வராமல் இருக்க வேண்டுமானால், கம்பெனி ஊழியர்களையும் அவர்கள் மூலமாய் இந்திய மக்களையும் சிவப்பு நாடாவால் கட்டுப் படுத்த வேண்டுமென்றும் விரும்பிப் பல சட்ட திட்டங்கள் வரையப்பட்டதாகவும், அச் சட்ட திட்டங்களுக்கு விரிவுரைகளும் ஆராய்ச்சியுரைகளும் எழுதும் திறமை வாய்ந்தவரே நிர்வாகப் பொறுப்பை ஏற்கத் தக்கவர் என்ற கொள்கை பரவின காலத்தில் சிவப்பு நாடா பழக்கத்துக்கு வந்த தென்றும் பின்னும் சிலர் எண்ணுகிறார்கள்.

நீண்ட காலமாக இந்தச் சிவப்பு நாடாவை அறுத்தெறிய யாண்டேரு, கார்த் புருக், பெண்டில், கர்சான் போன்ற பிரபுக்கள் அரும்பாடுபட்டார்கள். "சுருக்கமான குறிப்புகள் போதும்" என்று இவர்கள் எவ்வளவோ கூப்பாடு போட்டும், அவ்வளவும் பலனற்றுப் போயிற்று.

இப்படிப்பட்ட சர்வ வல்லமை படைத்துள்ள சிவப்பு நாடாவின் கொடுங்கோன்மையை ஒழிக்கக் குடியாட்சி ஏற்பட்டுள்ள இச்சமயம்தான் தருணமானது. நம் மாகாண சர்க்காரும் இத்துறையில் சீர்திருத்தம் செய்ய முனைந்து ஒரு நிபுணர்கள் குழுவை ஏற்படுத்தியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

காலக்ஷேபம்

பேஷ்!

புருஷன்:—அடியே! நம்ப நாயை அவிழ்த்து விட்டேன். பிச்சைக்காரர் தொல்லை தாங்க முடியவில்லையே!

மனைவி:—அது ஒன்றும் பிரயோஜனமே யில்லை! பலமாகக் குரைக்க மாட்டேனென்கிறது. எல்லோரையும் நீங்கள் விரட்டுகிறதே தேவலை!

★

அப்படியா சேதி?

பட முதலாளி:—தங்கள் வாழ்க்கை வரலாற்றை மிகவும் சுவாரஸ்யமாக எழுதியிருக்கிறீர்களே!

சினிமா நக்ஷத்திரம்:—ஆமாம்; நேற்றுக்கூட ஒருத்தர் வந்து அதற்காக என்னைப் புகழ்ந்து விட்டுப்போனார். நீங்கள் அந்தப் புத்தகத்தை எனக்குக் கொஞ்சம் படித்துக் காண்பியுங்களேன்!

★

சபாஷ்!

பாட்டி (பேரனைப் பார்த்து):—இங்கே ஓடி வாடா, கண்ணு! ஒரு முத்தம் கொடு! காலணா தருகிறேன்.

பேரன்:—போ, பாட்டி! விளக்கெண்ணெய் குடிப்பதற்கே எங்கம்மா ஓரணா தருகிறாளே!

★

நியாயந்தான்!

"என்னப்பா, ஐந்து ரூபாய் மூன்று வருஷமாகத் தரவேண்டுமே! மறந்து விட்டாயா?"

"சேச்சே! நானே உன்னிடம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு என் வந்தனத்தையும் தெரிவித்து விட்டுப் போகவேண்டும் என்றுதான் இருக்கிறேன்...... இப்போது வந்தனத்தை ஏற்றுக் கொள். இன்னொரு தடவை ரூபாயைக் கொண்டுவந்து கொடுத்து விடுகிறேன்!"

வர மாட்டான்!

அம்மா:—அப்பிப் பயல் எங்கே போனான்? ரொம்ப நாழிகையாகக் காணுமே!

அப்பா (கோபத்துடன்):—அவன் என் மேஜையில் மசியைக் கொட்டிப் பாழ் பண்ணி விட்டான். அதற்காக அவனை அந்தச் சாமான் அறையில் தள்ளிக் கதவைச் சாத்தியிருக்கிறேன். அவன் இப்பொழுது வர மாட்டான்!

அம்மா:—சரிதான்; அவன் ஏன் இப்பொழுது வருகிறான்? நான் அங்கேதானே நேற்றுச் செய்த மைசூர்ப்பாகு அத்தனையையும் வைத்திருக்கிறேன்!

★

ரொம்ப சரி!

வைத்தியக்கார ஆஸ்பத்திரியைப் பார்வையிட ஒரு பெரியவர் போயிருந்தபோது, அங்கிருந்த கடிகாரம் வேகமாகப் போவதைக் கவனித்தார்.

பெரியவர்:—என் ஸார்! இந்தக் கடிகாரம் சரியாகப் போகவில்லையே!

சூபரின்டெண்ட்:—சரியாக இருக்கிறதானால் இங்கே ஏன் அது வருகிறது?

★

ரொம்ப சமர்த்து!

தாயார்:—முத்து, கையில் என்ன கட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறாய்?

முத்து:—பென்சில் சீவினேன்; கையில் காயம் பட்டு விட்டது!

தாயார்:—அடாடா, காயம் வலிக்குமே! அழாமலிருக்கிறாயே, சமர்த்து!

முத்து:—நீ வீட்டில் இல்லையாக்கும் என்று நினைத்து விட்டேன். அதனால்தான் அழவில்லை!



சந்திரஹாரம்

ஆசிரியர்: பிரேமசந்த

மொழி பெயர்ப்பு: ரா. வீழிநாதன்

ரத்தன் வெளியே போனதும் வக்கீல் வேலைக்காரனைக் கூப்பிட்டு, "டேய் சம்பு, என்னைச் சற்றுத் தூக்கி உட்கார்த்தி வையேன்! படித்த படுக்கையாகவே கிடப்பதனால், இடுப்பு வலி தாங்கவில்லை. அப்புறம் போய்க் கொஞ்சம் டீயும் கொண்டு வா. டீயைக் கண்களால் பார்த்தே எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன. இந்தப் பாழும் பத்தியத்தைக் கண்டாலே எனக்குப் பற்றி எரிகிறது. இருந்தாலும் 'அம்மா'வுக்காகச் சாப்பிட்டு வைக்கிறேன். அவளுடைய மனதைப் புண்படுத்த எனக்கு இஷ்டமில்லை. இந்த வைத்தியருடைய மருந்தினால் ஏதும் குணமிருப்பதாகவும் எனக்குத் தோன்றவில்லை. உனக்கு எப்படித் தோன்றுகிறது?" என்று கேட்டார்.

வேலைக்காரன் சம்பு, அவரை மெதுவாகத் தூக்கித் தலையணையைக் கொடுத்து உட்கார வைத்தான். பிறகு, "எசமான், உடம்பைக் கவனிச்சுக் கொள்ளுங்க, எசமான்! நானும் ரொம்ப நாளாகச் சொல்லணும்னுதான் இருந்தேன். அம்மாவுக்குப் பயந்துகிட்டுப் பேசாமல் இருந்துவிட்டேனுங்க!" என்றான்.

வக்கீல் சில நிமிஷங்கள் பேசவேயில்லை. பிறகு மெதுவாக, "நான் சாவுக்குக் கொஞ்சங்கூடப் பயப்படவில்லை, சம்பு! எனக்கு ஸ்வர்க்கம், நரகம் இதில் எல்லாம் கொஞ்சங்கூட நம்பிக்கையில்லை. கரும பலன்களுக்குத் தகுந்தபடிதான் மனிதன் பிறவி எடுக்கிறான் என்றால், கட்டாயம் நல்ல குடும்பம் ஒன்றில்தான் நான் பிறப்பேன். எனக்கு இதில் கொஞ்சங்கூடச் சந்தேகமேயில்லை. இருந்தாலும், ஏனோ தெரியவில்லை, சாக மனம் வரமாட்டேன் என்கிறது. 'மனிதன் செத்தபின் என்ன ஆவான்?' என்று நான் யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். அது புரியாக் கணக்காகவேயிருக்கிறது!" என்றார்.

"எசமான், அதுதான் சொல்லுகிறேனுங்க. உடம்பைக் கவனிச்சுக் கொள்ளுங்க. ஈஸ்வரன் மனது வைச்சால் ஒரு நொடியிலே உங்கள் உடம்பு குணமாகிவிடுங்க. எதுக்காக இப்படி மனதைப் போட்டு அலட்டிக் கொள்ளுகிறீங்க? என் எசமான், இன்னொரு டாக்டரைக் கூப்பிட்டு வரட்டுங்களா? நீங்க எல்லாம் படிச்சவங்க. அதனாலே படிக்காத எங்கள் வார்த்தையைக் கேட்க மாட்டேன்கிறீங்க. பட்டிக்காட்டு ஆசாமியாகிய எங்கள் வார்த்தையிலும் ஏதாவது நல்லது இருந்தால் எடுத்துக் கொள்ளுங்க. எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகமுங்க; உங்கள் உடம்பைக் கவனிக்கத்தான் ஆகணுங்க. நீங்க கேட்டாலும் சரி, கேட்காவிட்டாலும் சரி, எனக்கு ஒரு மந்திரவாதியைக் கூப்பிட்டு வந்து கேட்டுவிடணும்கிறது. இந்தப் பக்கத்து மந்திரவாதிங்கள் எல்லாம் ரொம்பக் கெட்டிக்காரனுங்களாம். இன்னிக்கிப் போய் நான்

யாராவது ஒருத்தனைக் கூப்பிட்டாரட்டுங்களா?'' என்றான் வேலைக்காரச் சம்பு.

சம்புவின் பேச்சைப் பிடிக்காமல் வக்கீல் முகத்தைத் திருப்பிக் கொண்டார். அவருக்குப் பேய் பிசாசு பிடித்தல், சக்கர தோஷம், பில்லி சூன்யம், கழிப்புக் கழித்தல் முதலிய மந்திர தந்திரங்களில் சிறிது கூட நம்பிக்கையே கிடையாது. அவையெல்லாம், 'ஏமாற்று வித்தை, மோசடி வித்தை, வெளி வேஷம்' என்பது அவருடைய அழுத்தமான அபிப்பிராயம். அதைப் பற்றி அவர் எவ்வளவோ பேரிடம், பரிகசித்துக்கூடப் பேசியிருக்கிறார். சில மந்திரவாதிகளை அவர் அடிக்கக்கூடப் போயிருக்கிறார். வேலைக்காரச் சம்புவுடன் எதிர்வாதம் செய்வதற்கு அவருக்குத் தெம்பு இல்லை. ஆகவேதான் அவர் முகத்தைத் திருப்பிக்கொண்டு விட்டார்.

இதே சமயம் சமையற்காரன் கையில் சுடச் சுடத் தேத் தண்ணீரை எடுத்துக் கொண்டு வந்து, ''டீ கொண்டு வந்திருக்கிறேன். சாப்பிடுகிறீர்களா?'' என்று பணிவுடன் கேட்டான்.

வக்கீல் தேத் தண்ணீர்க் கோப்பையை ஆவல் ததும்பும் கண்களுடன் பார்த்தவாறே, ''வேண்டாம் அப்பா, எடுத்துக் கொண்டு போய் விடு. நான் டீ குடித்தது அம்மாவுக்குத் தெரிந்தால் வருத்தப் படுவாள். என் அப்பா, இங்கே வந்த பிறகு என் தேக ஸ்திதியில் ஏதாவது மாறுதல் கொடுத்திருக்கிறதோ?'' என்று கேட்டார்.

சமையற்காரன், சம்புவைப் பார்த்தான். எப்பொழுதுமே அவனுக்குப் பிறருடைய அபிப்பிராயத்தைப் பார்த்து அதற்கு அனுசரணையாகத் தன் அபிப்பிராயத்தைச் சொல்லுவதுதான் வழக்கம். தானாக யோசித்துச் சொல்லும் சக்தி அவனுக்குக் கிடையாது. 'உங்கள் உடம்பு வரவரக் குணமடைகிறது' என்று சம்பு சொன்னால் அவனும் அதையே ஆமோதிப்பான். சம்பு அதற்கு நேர்மாறாகச் சொல்லியிருந்தால் தானும் அதேமாதிரிச் சொல்லி விடுவான். என்ன சொல்லுவது என்று புரியாமல் சமையற்காரன் 'தத்துப்பித்து' என்று விழிப்பதைப் பார்த்த சம்பு, ''எசமான், அதுதான் நான் சொன்னேனுங்களே? முகத்திலே கொஞ்சம் தெளிவு கொடுத்திருக்குங்க!'' என்றான்.



'' ...... எப்பொழுது மூச்சு நிற்குமோ !''

சமையற்காரன் அதை ஆமோதித்து, ''ஆமாம் ஸார், தெளிவு கொடுக்க ஆரம்பித்து விட்டது. ஆனால் இன்னும் நன்றாகத் தெளிவு கொடுக்கவில்லை!'' என்று சொல்லி வைத்தான்.

வக்கீல் அதற்கு ஒன்றும் பதில் சொல்லவேயில்லை. கொஞ்ச காலமாகவே அவரால் தொடர்ந்தாற்போல இரண்டு மூன்று நிமிஷங்கள் பேச முடியவில்லை. அப்படிப் பேசுகையில் சிற்சில சமயம் களைப்பு மேலிட்டு அவருக்குப் பிரக்ஞைகூடத் தவற ஆரம்பித்து விட்டது. அதற்குப் பிறகுதான் அவருக்குத் தன் உடம்பு வரவர மோசமாகிக் கொண்டு வருகிறது என்பது தெரிய வந்தது. அது முதற்கொண்டு, அவருக்குத் தன் முகத்தில், மூளையில், மண்டையில் எதிலுமே மரணத்தின் சாயை படர ஆரம்பித்து விட்டது போன்ற உணர்ச்சி ஏற்படலாயிற்று. 'தமக்கு இப்படியெல்லாம் தோன்றுவதற்குக் காரணம் தம்முடைய மனோ பலவீனமாய்த்தான் இருக்க வேண்டும்' என்று அவர் தன்னைத்தானே தேற்றிக் கொள்ளவும் முயன்றார். அவருக்கு வரவர மூச்சுத் திணறுவது அதிகரிக்கத் தொடங்கி விட்டது. சிற்சில சமயம் அவர் மூச்சு விடவும் முடியாமல் இழுக்கவும் முடியாமல் திக்கு முக்காடிப் போய் விடுவார். மூச்சு ஸ்தம்பித்து நின்று, தாள முடியாத பிராண வேதனையை அவருக்கு உண்டு பண்ணி விடும். 'செத்தால்கூடப் பரவாயில்லை' என்றுகூட எண்ணக்கூடிய அளவுக்கு அவரைக் கொண்டு வந்து விட்டுவிடும். இம்மாதிரி யிருந்தால், எப்பொழுது மூச்சு நிற்குமோ! எப்பொழுதுதான் இந்த உயிர் உடலை விட்டுப் பிரியுமோ! யார் கண்டார்கள்?



"அன்புள்ள சகோதரி பத்மாவுக்கு...!"

எதிரே தோட்டத்தில் நிலா, பனிப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு, தரையில் படுத்த வண்ணம் புலம்பிக் கொண்டிருந்தது. புஷ்பங்களும் செடிகளும் வாடிய முகத்துடன், தலையைத் தொங்க விட்டுக் கொண்டு, நம்பிக்கை, பயம் இவ்விரண்டும் ஒருங்கே சேர, மெதுவாகக் கை நடுக்கத்துடன் அதன் மார்பில் கைகளை வைத்துப் பார்ப்பவைபோலத் தோன்றின. அதன் உடல் ஜில்லிட்டு விட்டது என்பதை அறிந்ததும், வருத்தத்துடன் இரண்டு சொட்டுக் கண்ணீரைச் சிந்தி விட்டு மறுபடியும் முன்போலவே பார்க்கத் தொடங்கி விட்டன.

திடீரென்று வக்கீல் கண்களைத் திறந்தார். அவருடைய கண்களின் இரு ஓரங்களிலும் கண்ணீர்த் திவலைகள் முட்டிக் கொண்டு நின்றன. அவர் மெலிந்த குரலில், "டேய் சம்பு, நம் ரகு வந்திருக்கானா, என்ன?" என்று கேட்டார்.

பிறகு, தான் கேட்ட கேள்வியை நினைத்துப் பார்த்ததும், அவருக்கே வெட்கமாகப் போய் விட்டது. ஆகவே அவர் முகத்தில் ஒரு அசட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு. "ஏனோ தெரியவில்லை. எனக்கு ரகு வந்திருக்காற்போலத் தோன்றிற்று. அதனால்தான் அப்படிக் கேட்டுவிட்டேன்!" என்று சொல்லி மழுப்பினார்.

பிறகு அவர் ஒரு பெருமூச்சு விட்டவாறே மௌனம் சாதித்தார்; கண்களையும் இறுக மூடிக் கொண்டார்.

ரகு என்பது அவருடைய பிள்ளையின் பெயர். நல்ல வயது வந்தபின் அவன் இறந்து விட்டான். இந்தச் சமயம் ஏனோ தெரியவில்லை, வக்கீலுக்கு அடிக்கடி அவனுடைய ஞாபகம் வந்த வண்ணமாகவே யிருந்தது. சில சமயம் அவனுடைய குழந்தைப் பருவத்தின் நினைவுகள் அவருடைய மனத் திரையில் தோன்றும். சில சமயம் அவன் இறக்கும் தறுவாயிலிருந்த காட்சி கண் முன்பு வந்து நிற்கும். அதற்குள் அவ்வளவு தெளிவும், உயிரும் எப்படித்தான் புகுந்து கொண்டனவோ! இன்று வரை அவருடைய ஞாபக சக்தி இவ்வளவு ஸ்பஷ்டமானதாகவும் உயிரற்றவைக்கு உயிர் அளிக்கக் கூடியதாகவும் சித்திர விசித்திர மானதாகவும் இருந்ததே யில்லை.

சில நிமிஷங்களுக்குப் பிறகு அவர் மறுபடியும் கண்களைத் திறந்தார். எதையோ பறிகொடுத்து விட்டவர்போல இங்கும் அங்கும் சுற்றிப் பேந்தப் பேந்த விழித்தார். அவருக்கு, 'உன் உடம்பு எப்படி யிருக்கிறது, அப்பா!' என்று அவருடைய தாய் வந்து பரிவுடன் கேட்பது போன்ற பிரமை தட்டியது.

உடனே அவர் வேலைக்காரன் சம்புவைக் கூப்பிட்டு, "இங்கே வா, அப்பா! ஓடிப் போய் யாராவது ஒரு வக்கீலைக் கையோடு அழைத்துக் கொண்டு வா. சீக்கிரம் போ! அம்மா வந்துவிடப் போகிறார்கள்!" என்றார்.

அதற்குள் காரின் 'ஹார்ன்' சப்தம் கேட்டது. அடுத்த சில விநாடிகளுக்கெல்லாம் ரத்தன் அங்கே வந்து விட்டான். வக்கீலைக் கூப்பிட்டு வரும் விஷயம் அப்படியே நின்றுவிட்டது.

வக்கீல் குரலில் சந்தோஷமும் ஆவலும் தொனிக்க, "எங்கே போயிருந்தாய்? ஏதாவது விவரம் தெரிந்ததா?" என்று கேட்டார்.

ரத்தன் அவருடைய நெற்றியில் கையை வைத்துப் பார்த்துக் கொண்டே, "எத்தனையோ இடங்களைத் தேடினேன். எங்குமே அவர் கண்களில் தென்படவில்லை. இவ்வளவு பெரிய பட்டணத்தில், 'ஒரு தெரு எங்கே யிருக்கிறது?' என்பதையே கண்டுபிடிக்க முடியாதபொழுது, ஓர் ஆளை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? எனக்கு அது முடிகிற காரியமாகத் தோன்றவில்லை. ஆமாம், மருந்து சாப்பிட நேரமாகி விட்டது போலிருக்கிறதே!" என்றான்.

வக்கீல் உள் அடங்கிய குரலில், "கொண்டு வா, சாப்பிடுகிறேன்!" என்றார்.

ரத்தன் மருந்தை எடுத்து அவருக்குக் கொடுத்தான். ஏனென்று தெரியவில்லை, பயத்தினால் அவனுடைய உடம்பு நடுங்கிற்று. ஒரு தெளிவற்ற, இனம் தெரியாத வேதனை அவனுடைய மனதைப் படாத பாடு படுத்தி விட்டது. ஆகவே, "ஆமாம், ஊருக்கு யாருக்காவது தந்தி கொடுக்கட்டுமா?" என்று அவன் கேட்டான்.



"டீ கொண்டுவந்திருக்கிறேன்."

வக்கீல் கேள்விக் குறியுடன் அவனுடைய முகத்தைப் பார்த்தார். பிறகு தானாகவே அவனுடைய எண்ணத்தைப் புரிந்துகொண்டு, "வேண்டாம், வேண்டாம். யாரையும் கூப்பிட வேண்டாம். எனக்குத்தான் உடம்பு குணமாகிக்கொண்டு வருகிறதே! எதற்காகக் கூப்பிட வேண்டும்?" என்றார்.

பிறகு, அவர் ஒரு கணநேரம் மௌனமாக இருந்துவிட்டு, மெதுவாகத் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு, "எதற்கும் உயில் எழுதிவைத்து விட்டால் நல்லது என்று எண்ணுகிறேன்!" என்றார்.

அதைக் கேட்டதும் ரத்தனுக்குத் தன் தலையில் பேரிடி விழுந்தது போன்றிருந்தது. அவன் செயலற்று அவயவங்கள் மரத்துப் போய் அசைவற்று அப்படியே நின்றுவிட்டான். அவனுக்குத் தன் காலடியிலிருந்து பூமி நழுவி விடுவதுபோலவும், வானமே இடிந்து விழுவது போலவும் தோன்றிற்று. வெகுநேரம் அவன் உயிரற்ற சடலம்போல அசைவற்று எவ்வித ஊன்றுகோலுமின்றிக் கல்லாகச் சமைந்து நின்றான். பிறகு சிறிது சிறிதாக உணர்வு பெற்றுக் கண்களில் கண்ணீர் மல்க, கட்டிய தொண்டையுடன் மெதுவான குரலில், "ஊருக்குத் தந்தி கொடுத்து யாரையாவது வரவழைக்கிறேனே! எல்லாவற்றுக்கும் யோசனை சொல்ல நமக்கு வேண்டியவர்கள் இங்கே யார் இருக்கிறார்கள்?" என்றான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நமக்கு வேண்டியவர்கள் யாருமே பக்கத்தில் இல்லையென்று அவன் மிகவும் மனவருத்தப் பட்டான். யாராவது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் பக்கத்தில் இருந்தால் ஆலோசனை சொல்லுவார்கள்; ஆறுதல் அளிப்பார்கள். அவசரத்துக்கு ஓடிப்போய் டாக்டரை அழைத்து வருவார்கள். அவனால் ஒண்டியாக என்ன செய்யமுடியும், பாவம்! ஆபத்து சமயத்துக்கு உதவாத சுற்றத்தார்கள் இருந்தால் என்ன பிரயோசனம்? வக்கீல் 'யாரையும் கூப்பிடாதே!' என்று எதற்காக இப்படித் தடுக்கிறார்?

இதற்கு மத்தியில் அவனுக்கு உயிலின் நினைவு வேறு வந்தது. 'இவ்வளவு காலும் இல்லாமல் இன்றைக்கு அவர் உயிலைப் பற்றிப் பிரஸ்தாபித்தாரே! ஒருவேளை வைத்தியர் ஏதாவது சொல்லி இருப்பாரோ? என்ன நடக்குமோ, பகவானே!' என்று அவன் வாய் விட்டு முணுமுணுத்துக் கொண்டான். சொல்லொணாத் துயரத்தினால் அவனுக்குத் தொண்டையை அடைத்தது. அவனுக்கு வாய்விட்டு உரக்க அழ வேண்டும் என்று தோன்றிற்று. அடுத்த கணம் அவனுக்குத் தன் தாயாரின் நினைவும் எழுந்தது. குழந்தைப் பருவத்தில் அவன் எத்தனையோ தடவை தன் தாயாரின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுது மன ஆறுதல் பெற்றிருக்கிறான். இந்தச் சமயத்தில் அந்தத் தாயார் உயிருடன் இருந்தால், அவளுடைய மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழலாமே!' என்று அவனுக்குத் தோன்றிற்று. பூத உடலை நீத்துச் சென்றுவிட்ட அந்தத் தாயாரை அவன் இன்று நினைத்து என்ன பிரயோசனம்?

இம்மாதிரி அவன் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்பொழுது சமையற்காரன் வந்து, "அம்மா, சமையல் ஆகிவிட்டது; இலை போடட்டுமா?" என்று கேட்டான்.

ரத்தன் அவனை ஒருமுறை கடுமையான பார்வையுடன் விழித்துப் பார்த்தான். அவன் அவனுடைய பதிலை எதிர்பாராமலேயே பேசாமல் திரும்பிவிட்டான். ஆனால், அடுத்த கணமே ரத்தனுக்குச் சமையற்காரன்மீது இரக்கம் ஏற்பட்டது. 'அவன் சாப்பிடக் கூப்பிட வந்ததில் என்ன தப்பு? ஒருநாள் உணவை ஒழித்தால் இந்தப் பாழும் வயிறு கேட்கிறதா?' என்ற எண்ணம் எழுந்ததும், அவன் சமையலறைக்குச் சென்று சமையற்காரனைக் கூப்பிட்டு, "நீங்கள் எல்லோரும் சாப்பிடுங்கள்; இன்றைக்கு என்னவோ எனக்குப் பசியே யில்லை!" என்றான்.

சமையற்காரன் பிடிவாதத்துடன், "இரண்டே இரண்டு பிடி சாப்பிடுங்கள், அம்மா! வெறும் வயிற்றுடன் கிடந்தால் உடம்புக்கு ஆகாது" என்றான்.

சமையற்காரனின் பிடிவாதம் தோய்ந்த அந்தக் குரலில், நல்லெண்ணமும் அனுதாபமும் தொனிப்பதைக் கண்ட ரத்தனுக்குச் சிறிது ஆறுதல் ஏற்பட்டது. 'இங்கே நமக்கு யார் வேண்டியவர்கள் இருக்கிறார்கள்?' என்று நாம் எண்ணினோமே, அது சுத்தத் தப்பு' என்ற முடிவுக்கு அவளை வரும்படி செய்து விட்டது, சமையற்காரனின் அன்புப் பேச்சு. அன்றுவரை ஈவு இரக்கமின்றிக் கடுமையாக வேலை வாங்கும் எசமானியாகக் காட்சி அளித்த அதே ரத்தன், தன்னிடம் அன்பு வைத்துப் பேசுவதைக் கண்டதும் சமையற்காரனுடைய முகத்திலும் தனி மகிழ்ச்சி தாண்டவமாடலாயிற்று. ரத்தனுடைய முகத்திலும் அளவு கடந்த கனிவு தோன்றிற்று.

"என் சமையல்காரரே! எசமானருக்கு இந்த வைத்தியரின் மருந்தினால் ஏதாவது குணம் ஏற்பட்டிருக்கிறதோ?" என்று கேட்டாள்.

சமையற்காரன் பயந்தவாறே, "தெளிவு கொடுக்க ஆரம்பித்து விட்டது, அம்மா! ஆனால் இன்னும் நன்றாகத் தெளிவுகொடுக்கவில்லை!" என்று வக்கீலிடம் சொன்ன பதிலையே அவன் திருப்பிச் சொன்னான்.

ரத்தன் அவநம்பிக்கை தாண்டவ மாடும் குரலில், "நீயும் என்னை ஏமாற்றப் பார்க்கிறாயே!" என்றாள்.

சமையற்காரனின் கண்களில் நீர் சுரந்தது. "கடவுள் நன்மையே செய்வார், அம்மா! கவலைப்படாதீர்கள்; நம் கையில் என்ன இருக்கிறது?" என்றான்.

"இங்கே யாராவது ஜோஸியர் இருந்தால் கேட்டுப் பார்க்கலாமே! ஏதாவது சாந்தி - கீந்தி செய்தால் குணம் ஏற்படலாம் அல்லவா?" என்று கேட்டாள் ரத்தன்.

சமையற்காரன் முகத்தில் சந்தோஷக் குறி தாண்டவமாட, "நானும் அதைத்தான் சொல்லலாம் என்று இருந்தேன். ஆனால் 'நம் எசமானருக்கு இதெல்லாம் பிடிக்காதே; சொன்னால் எரிந்து விழுவாரே!' என்று பேசாமல் இருந்தேன்" என்றான்.

ரத்தன் திட்டமான குரலில், "நாளைக்கு நீ யாராவது ஒருத்தனை அழைத்து வா!" என்றாள்.

"எசமானர் கோபித்துக் கொண்டால்?"

"நான் பார்த்துக் கொள்ளுகிறேன். அதற்கெல்லாம் நீ கவலைப்படாதே!" என்று சொல்லிவிட்டு, ரத்தன் தன் அறைக்குச் சென்றாள். பிறகு விளக்கடியில் உட்கார்ந்து பத்மாவுக்கு ஒரு கடிதம் எழுதலானாள்:—

"அன்புள்ள சகோதரி பத்மாவுக்கு,

என்ன நடக்குமோ? இப்பொழுதே சொல்லுவதற்கில்லை. 'நான் இவ்வளவு நாட்களாக வீண் பிரமையில் இருந்தேன்' என்பது இன்றுதான் எனக்கு வெட்ட வெளிச்சமாகப் புரிந்தது. என் அகத்துக்காரர் இவ்வளவு நாட்களும் உள்ளது உள்ளபடி உரைக்காமல், தன் உடல் நிலைமையை என்னிடம் மறைத்து வைத்திருக்கிறார். ஆனால் இன்று அப்படிச் செய்ய அவரால் முடியவில்லை. வியாதி ரொம்ப முற்றிவிட்டது. உன்னிடம் நான் என்னத்தைச் சொல்லுவேன்? இன்று அவர் 'உயில் வேண்டுமானால் எழுதி விடுவோமா?' என்று கேட்டார். நான்தான் 'அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்' என்று தடுத்துவிட்டேன். அதுமுதல் எனக்கு உடல் பதறுகிறது; என்ன செய்வது என்றே புரியவில்லை. 'விஷத்தைத் தின்று உயிரை விட்டு விட்டால் என்ன?' என்றுகூடத் தோன்றுகிறது. இந்த உலகத்தைப் படைத்த கடவுளை 'தயாளன், கருணாகரன், தீனபந்து, அநாத ரக்ஷகன்' என்று என்னவெல்லாமோ பட்டங்கள் கொடுத்துப் புகழ்கிறார்களே! அவையெல்லாம் எனக்குப் பொய்யோ என்று தோன்றுகிறது. என்னைக் கேட்டால், அந்தக் கடவுளைப் போன்ற கல்நெஞ்சன், கருணையற்றவன், ஈவு இரக்கம் இல்லாதவன் இந்த உலகத்திலேயே வேறு யாரும் இருக்க முடியாது என்று சொல்லுவேன். பூர்வஜன்மத்தில் செய்த பாவ-புண்ணியங்களுக்குத் தகுந்தபடிதான் சுகமும் - துக்கமும் என்று சொல்லுகிறார்களே, அது நம் மனதை நாமே ஏமாற்றிக் கொண்டு ஆறுதல் செய்து கொள்ளுவதற்காகத்தானோ என்று தோன்றுகிறது. எந்தத் தண்டனைக்கு உண்மையான காரணமே நமக்குத் தெரியாதோ, அப்படிப்பட்ட தண்டனையை அளிப்பதனால் அவனுக்கு என்ன கிட்டிவிடப் போகிறது? தடி எடுத்தவன் தண்டல்காரன் என்பார்களே, அதுபோல நம்மைக் கஷ்டத்துக் குள்ளாக்குவதற்



'இப்ப என்னத்துக்குங்க?'

காகவே கற்பிக்கப்பட்ட ஒரு காரணமா யிருக்குமோ என்றுதான் நான் எண்ணுகிறேன். முன்னும் பின்னும் நிரம்பிய இருள் அடர்ந்த நிர்மானுஷ்யமான, சந்தடியே யில்லாத வாழ்க்கைப் பாதையைக் கடந்து செல்ல, எனக்கு 'மினுக்கு-மினுக்கு' என்று கூடச் சுட்டிக்கொண்டு எரியும் ஒரு விளக்குக் கிடைத்திருந்தது. அதை நான் வெகு ஜாக்கிரதையாகப் புடவைத் தலைப்பில் மறைத்துக் கொண்டு, காற்றில் 'பட்'டென்று அணைந்து விடாமல் இருக்க வேண்டுமே என்று கடவுளை வேண்டிக் கொண்டே வாழ்க்கைப் பாதையைக் கடக்கும் வேலையில் முனைந்தேன். ஆனால் பாழுந் தெய்வத்துக்கு அது பொறுக்கவில்லை. அந்த விளக்கையும் பலவந்தமாக என்னிடமிருந்து பிடுங்கிக்கொண்டு விடுவார் போலிருக்கிறது. இந்தக் கும்மிருட்டில் நான் எங்கே போவேன்? என்ன செய்வேன்? என் கையைப் பிடித்து வழி காட்டுபவர் யார்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இதையெல்லாம் யோசிக்கும்போது என் மூளைதான் குழம்புகிறது. கடவுள் எனக்கு என்ன வழி விடப் போகிறாரோ, புரியவில்லை.

பத்மா, உன்னிடம் ஒரு விஷயத்துக்கு மன்னிப்புக் கோருகிறேன். உன்னிடம் நேரில் சொல்லிவந்தபடி, உன் அகத்துக்காரரைத் தேடப் போவதற்கு எனக்கு இன்றுவரை பொழுதே கிடைக்கவில்லை. இன்றுதான் எத்தனையோ 'பார்க்கு'களுக்குச் சென்று பார்த்தேன். ஆனால் அவர் என் கண்களுக்குத் தட்டுப் படவில்லை. எனக்குப் பொழுது இருக்கும் பொழுதெல்லாம் அவசியம் அவரைத் தேடிப் பார்க்கிறேன்.

அம்மாவுக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவிக்கவும். விசுவம்பருக்கும் கோபிக்கும் எனது ஆசிகள்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள
ரத்தன்.

கடிதத்தை எழுதி முடித்துவிட்டு ரத்தன் வராந்தாவுக்கு வந்தான். குளிர் காற்று லேசாக வீசிக் கொண்டிருந்தது. அது நோயுற்ற இயற்கையன்னை படுக்கையில் படுத்துப் புலம்பிக் கொண்டிருப்பது போலத் தோற்றமளித்தது.

இதே சமயம் வக்கீலுக்கும் சுவாசம் கண்டு விட்டது!

முப்பதாம் அத்தியாயம்

சலனமும், சாந்தியும்

இரவு மணி மூன்று அடித்து விட்டது. ரத்தன் நள்ளிரவுக்குப் பிறகு, சாய்வு நாற்காலியில் படுத்தவாறே தூங்கி வழிந்து கொண்டிருந்தான். திடீரென வக்கீலின் தொண்டை 'கர்புர்' என்று இழுக்க ஆரம்பித்துவிடவே, அவன் திடுக்குற்று விழித்துக் கொண்டான். அவருக்கு மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது. அவருடைய தலை மாட்டில் போய் அவன் உட்கார்ந்து கொண்டு, தலையைத் தன் தொடையில் எடுத்து வைத்துக் கொண்டான். 'இன்னும் பொழுது விடிய எத்தனை நேர மிருக்கிறதோ?' என்று அவன் மேஜைமீது வைத்திருந்த கடிகாரத்தைப் பார்த்தான். மணி மூன்றுதான் ஆகியிருந்தது. பொழுது விடிய இன்னும் மூன்று மணி நேரம் பாக்கி யிருந்தது. வைத்தியர் ஒன்பது மணிக்கு மேல்தானே வருவார்! இதை நினைத்ததும் அவனுக்குக் கவலை இன்னும் அதிகரித்தது. இந்தப் பாழும் இரவு சீக்கிரம் தொலையாதா? ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாக அல்லவா கழிகிறது?

சில நிமிஷங்களுக்குப் பிறகு வக்கீலின் மூச்சு வேகம் சற்றுத் தணிந்தது. உடல் முழுவதும் வியர்த்து விட்டிருந்தது. ரத்தனை நகர்ந்து போகும்படி அவர் ஜாடை காட்டி விட்டுத் தலையணையில் தலையை வைத்துக் கொண்டு, மறுபடியும் கண்களை மூடினார்.

சிறிது நேரத்துக்குப் பின் அவர் மிகவும் மெல்லிய குரலில், "ரத்தன், நான் போகும் வேளை நெருங்கி விட்டது. ஏதாவது குற்றங் குறைகள் இருந்தால்......" என்று சொல்லிய வண்ணமே இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டு, ரத்தனை யாசிக்கும் பாவனையில் பார்த்தார். இன்னும் ஏதோ சொல்ல விரும்பினார். ஆனால் வாயிலிருந்து வார்த்தை வெளி வந்தால்தானே?

"சம்பு! சமையற்காரரே! இரண்டு பேரும் எங்கே தொலைந்து விட்டீர்கள்?" என்று ரத்தன் உரக்கக் கூச்சலிட்டான்.

சமையற்காரன் ஓடி வந்து, "நான் தூங்கவே யில்லையே, அம்மா! ஐயாவுக்கு ஏதாவது......" என்று ஆரம்பித்தான்.

ரத்தன் அவனை அதட்டி, "உளறாதே! சீக்கிரம் ஓடிப்போய்க் கையோடு கையாக வைத்தியரை அழைத்துக் கொண்டு வா!" என்றான்.

சமையற்காரன் உடனே தன் பழைய 'ஓவர் கோட்'டை எடுத்து மாட்டிக்

கொண்டு, கையில் தடியுடன் வைத்தியரை அழைத்து வரப் புறப்பட்டான். ரத்தன் எழுந்து 'ஒற்றடம் கொடுத்தால் கொஞ்சம் சௌகரியம் ஏற்படுமோ?' என்ற எண்ணத்தில், 'ஸ்டவ்'வைப் பற்ற வைத்தாள். அவளுடைய பதற்றம் பலவீனம், பயம், துயரம் எல்லாம் எங்கோ பறந்து விட்டன. அவைகளுக்குப் பதிலாக அவளுடைய உள்ளத்தில் ஒரு தன்னம்பிக்கை உதித்தது. 'கடமையைச் செய்ய வேண்டும்' என்ற துடிப்பு அவளைத் தன் நிலைக்குக் கொண்டு வந்து விட்டது.

'ஸ்டவ்'வைப் பற்ற வைத்தபின் அவள் பஞ்சில் சூடு காட்டி, வக்கீலின் மார்பில் ஒற்றடம் கொடுக்கலானாள். பத்துப் பதினைந்து நிமிஷம் அவசர அவசரமாக ஒற்றிய பிறகு, வக்கீலுக்குக் கொஞ்சம் மூச்சு விட முடிந்தது. 'கர் புர்' என்ற இழுப்பும் சற்றுக் குறைந்தது; மெல்லிய குரலில் பேசவும் முடிந்தது. அவர் ரத்தனுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு, தம் கன்னங்களில் வைத்துக் கொண்டார். பிறகு, "உனக்குத்தான்......ரொம்பக் கஷ்டம், ரத்தன்! இவ்வளவு சீக்கிரம் காலன் என்னை நெருக்குவான் என்று நான் எண்ணவே யில்லை. நான் உனக்கு ரொம்பவும் தீங்கு இழைத்து விட்டேன். அப்பா! எவ்வளவு பெரிய தீங்கு தெரியுமோ? நினைத்தாலே பயமாயிருக்கிறது. நான் உன் வாழ்வையே குலைத்து விட்டேன். என்னை மன்னிப்பாயா?" என்றார்.

அவருடைய வாயிலிருந்து கிளம்பிய கடைசி சொல் அதுதான்; வாழ்க்கையின் கடைசி சூத்திரமும் அதுவே; அதுவேதான் மோகபாசத்தின் கடைசிக் கட்டும்கூட.

ரத்தன் வாசற் பக்கத்தைப் பார்க்கலானாள். போன சமையல்காரன் இன்னும் வரவில்லை. பக்கத்தில் சம்பு நின்று கொண்டிருந்தான். எதிரே பரவியிருந்த மையிருட்டும், தன் வாழ்வின் கடைசி மரண வேதனைக்கு இலக்காகி மூர்ச்சையற்று விழுந்து கிடந்தது.

"சம்பு, கொஞ்சம் தண்ணீர் கொதிக்க வையேன்!" என்றாள் ரத்தன்.

சம்பு நின்றபடியே, "இப்ப என்னத்துக்குக்கா? இனிமேல் பிராயச் சித்தமும், கோதானமும் செய்து, வாயில் இரண்டு துளித் துளசி நீரை விட வேண்டியதுதான்!" என்று சொன்னான்.

அவசர டாக்டர்!

காலஞ்சென்ற பண்டித மோதிலால் நேருவுக்கு வெகு காலமாக ஆஸ்துமா வியாதி உண்டு. அதற்குத் தக்க சிகிச்சை செய்து கொள்வதற்காக அவர் ஒரு முறை ஆஸ்திரியா தேசத்தின் தலைநகரமாகிய வியன்னா நகரத்தில் உள்ள ஒரு பிரபல டாக்டரிடம் போயிருந்தார்.

ஆயிரக்கணக்கான தூரம் பிரயாணம் செய்து, பல கடல்களையும் நாடு நகரங்களையும் கடந்து சென்றவர், டாக்டரிடம் தம்முடைய நோயைப் பற்றிய எல்லா விஷயங்களையும் விவரமாகச் சொல்லி, தக்க சிகிச்சை பெற்றுக் கொள்ள விரும்புவது இயற்கைதானே! ஆனால், அந்த டாக்டருக்கு யாராவது நான்கு வார்த்தைகளுக்கு மேல் பேசுவது பிடிக்காது. அவர் பண்டித நேருவைப் பார்த்து, "உமக்கு என்ன வியாதி? சுருக்கமாகச் சொல்லும்" என்றார்.

நேருஜி சற்று நேரம் வரை யோசித்து விட்டு, தம்முடைய நோயைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார். அது சற்று நீண்டு விட்டது.

உடனே டாக்டருக்குக் கோபம் வந்து விட்டது. "அதெல்லாம் இருக்கட்டும். பழைய சமாசாரம். இப்போது நீங்கள் என்ன வியாதியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்!" என்றார்.

மோதிலால் நேருஜிக்கும் கோபம் வந்து விட்டது. "இப்போதா? இப்போது நான் வேறு ஒரு விதமான நோயாலும் கஷ்டப்படவில்லை. தங்களுடைய பொறுமையின்மை என்னும் நோயால்தான் கஷ்டப்படுகிறேன்!" என்றார்.

டாக்டர் சிரித்துவிட்டார்!

ரத்தன் தன் கணவருடைய மார்பில் கை வைத்துப் பார்த்தாள். மார்பில் சூடு இருந்தது. அவள் மறுபடியும் 'சமையற்காரன் வந்து விட்டானோ?' என்று பார்ப்பதற்காக வாசற்புறம் தன் கண்களை ஓட்டினாள். ஆனால் அவன் வருவதாகக் காணோம். வைத்தியர் வந்து விட்டால், 'வக்கீலின் உடம்பு குணமடைந்து விடலாமோ?' என்று அவளுக்கு உள்ளூற சபலம். 'வைத்தியத்துக்கு இவரை இந்த ஊருக்கு ஏன் அழைத்து வந்தோம்? வழிக் கஷ்டமும், ஊர் ஒத்துக் கொள்ளாமற் போனதும் தான் இவருடைய வியாதி அதிகரித்து விட்டதற்குக் காரணமாயிருக்குமோ? என்றைக்கும் இல்லாத திருநாளாக இன்றைக்கு என்று நமக்கு ஏன்தான் உலாவப் போக வேண்டும் என்று தோன்றிற்றோ? பனி அடித்து அவருடைய உடம்பு ஸ்திதி கெட்டிருக்குமோ?' என்று அவள் பச்சாத்தாபப் பட்டாள். வாழ்க்கை என்பது ஒரு நீண்ட பச்சாத்தாபத்தைத் தவிர வேறு என்ன? (தொடரும்)

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்


5,00,000 நூற்கும் கதிர்கள். **நம்பர் 80 வரை நூல்கள்.**

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒற்றை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காசிக்கள் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள் எங்கள் எடுப்பிய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

தற்போது நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டுள்ளதால், நூல் தேவையானவர்கள் தங்கள் மாகாணம் அல்லது சமஸ்தான டெக்ஸ்டைல் கண்ட்ரோல் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

மானேஜர்கள்: ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.




Policy
WORLD WIDE POLICY NO. 558
ஒரே ஒரு பிரீமியம்
உங்கள் வருங்காலத்திய
எழுதும் நிலைமையின் முன்னேற்
றத்தை இன்ஷ்யூர் செய்கிறது.
. . . ஏனென்றால் மென்ட்மோர் ஆட்டோப்ளோ
பேனா இந்தியாவின் சீதோஷ்ண நிலைமையைத்
தாங்கக்கூடிய பொருள்களால் ஸ்பெஷலாக
செய்யப்பட்டது. ட்ராப் - பில்லிங், லீவர்,
ஸ்டட் - பில்லிங் முதலிய மாடல்களில்
கிடைக்கிறது. அதனுடைய கெட்டியான
நிப் 14 காரட் தங்கத்தால் செய்யப்பட்
டது. ஆஸ்மி இருடியத்தில் தோய்க்
கப்பட்ட முனையோடுகூடியது. ஒவ்
வொரு பேனா குழலின்மேலும் நிப்
பின்மேலும் மென்ட்மோர் என்ற
பெயர் செதுக்கப்பட்டிருக்கிறதா
என்று கவனித்துப் பாருங்கள்.
உங்கள் ஆயுள்கால சேவை
யின் அஷ்யூரன்ஸ்.
ரூ. 15!
இங்கிலாந்தில் செய்யப்பட்டது.
MENTMORE
Auto-Flow
மென்ட்மோர் ஆட்டோப்ளோ.
FOUNTAIN PEN
வர்த்தக விசாரணைகளுக்கு உரிமைபெற்ற முழு வினியோகஸ்தர்கள்
முல்லர் அண்டு பிப்ஸ் (இந்தியா) லிட்., தபால்பெட்டி நெ. 773, பம்பாய்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk Madras.

கல்கி



KALKI நவம்பர் 16, 1947 4 அணா



ஜுரத்தில்

உஷ்ணம் 102 டிக்ரிக்கு மேலே போனால், உங்கள் கூந்தல் உதிர்வது நிச்சயம். அம்மை யானாலும் சரி, 'டைபாயிட்' 'மலேரியா' 'இன்புளுயன்ஸா' முதலிய விஷஜுரங்க ளானாலும் சரி, சூடு காரணமாகவே மயிர் அபிரிமிதமாகக் கொட்டுகிறது. ஜுர ஸமயங்களில் உஷ்ணம் அதிகமாக ஏறு விடினும், மயிர் உதிர்வது மட்டும் தவறு வதே யில்லை. அப்படி உதிரும்போது தக்க சிகிச்சை செய்து தடுக்காம லிருந்து விட்டால், மயிர் விடாமல் உதிர்ந்து தலையும் வழுக்கையாய் விடும்.

வெள்ளம் வந்த பிறகு அணையிடுவதேன்? மயிர் உதிர ஆரம்பிக்கு முன்னரே, கூந்தலைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். ஜுரத்துக்குப் பிறகு கேசம் அரை பங்கு கால் பங்காகிக் குறைந்து விட்டால், கேசவர்த்தினியைக் கொண்டு கேசத்தை விருத்தி செய்து பூர்ணமாக்கிக் கொள்ளுங்கள். கடைசியாக எல்லாப் பரிசைக்ஷைகளும் செய்தான பிறகு கேசவர்த்தினியே கூந்தலுக்குச் சிறந்தது என்று தெரியவர்தால், கேசவர்த்தினியை முதலிலேயே கைக்கொள்ளலாமே?

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை
ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்

அஜீரணத்தாலும் மலச் சிக்கலினாலும்

வேதனை இருந்துகொண்டிருக்கும்

பத்துக் குழந்தைகள் பெற்ற அம்மையார் ஒரு சிறு அளவு க்ருஷனை மிக ஸ்லாகிக்கிறார்

அஜீரணம், தலைவலி, மலச் சிக்கல் ஆகிய உபாதைகளால்–பத்துக் குழந்தைகளைப் பெற்ற அந்த அம்மையாருக்கு வாழ்க்கையே ஒரு பாரமாக இருந்தது. தயக்கமற்று சந்தோஷமாக ஒரு சிறிய வழக்கத்தை மேற்கொண்டார். பத்து வருஷங்களுக்கு "ஒரு சிறு அளவாகிலும்" தொடர்ந்து க்ருஷன் சாப்பிட்டு அவர் அடைந்த நன்மையைப் பற்றி பின்வரும் கடிதத்தில் கூறுகிறார்:—

"க்ருஷன் சால்ட்டை பத்து வருஷங்களாக உட்கொண்டு வருகிறேன். அதைச் சாப்பிடாமலிருக்கத் துணிய மாட்டேன். அஜீரணம், தலை வலி, மலச் சிக்கல் ஆகியவற்றால் பெரிதும் துன்ப மடைவதுண்டு. அதி சீக்கிரம் க்ருஷன் சாப்பிட விரும்பினேன். தற்போது எனக்கு வயது 46—பத்து குழந்தைகளைப் பெற்றெடுத்தேன். நான் க்ருஷனுக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது சரிவர குடல் சுத்தமாகி பூரண சௌக்யத்துடனிருக்கிறேன்."

—(மிஸஸ்) வி. ஜே. கோவெண்ட்ரி

இந்த அம்மையாரின் அஜீரணம், தலை வலி, மலச்சிக்கலெல்லாம் க்ருஷனைக் கண்டதும் பூரணமாக மறைந்தது எப்படி என்று கேட்பது நியாயந்தான். அந்த ரகசியம் வெளிப்படையானது. பரிசீலனை செய்து பார்த்ததில் க்ருஷனில் மிகவும் சத்துள்ள ஆறு உப்புத் தாதுக்களிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. அதுதான் இரகசியம். மேற்படி ஆறு தாதுக்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குணமுண்டு. ஒரு தாது ஓரிடத்தில் சக்தியற்றுப் போனால்—அந்த சமயத்தில் மற்றொன்று அதற்கு ஈடு கொடுக்கும். வயிறு, குடல், மூத்திர கோசம் மற்றும் ஜீரணக் கருவிகளும் சரிவர வேலை செய்ய உதவுகிறது.

ஒவ்வொரு கெமிஸ்டிடமும் வியாபாரியிடமும்—க்ருஷன் பாட்டில் ஒன்றுக்கு ரூ. 1-10-0 வீதம் கிடைக்கும். நீங்களும் பிரதி தினமும் சிறிய அளவில் க்ருஷன் சாப்பிடுங்களேன்!

REGD. NO. M. 4392

License No. 18
Licensed to post without prepayment



[illegible]: 112, [illegible]
[illegible], 93, [illegible]